www.tamilarangam.net

# நச்சாயுதம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**நவ சகாப்தம்**

ஜூலை 1987
வெளியீடு—1

நன்கொடை
ரூபாய்
இரண்டு

ஆசிரியர் :
**ஏ.ஜீ.காந்தன்**

வெளியிட்டோர் :
நவசகாப்தம்
வெளியீட்டகம்

இதழ் குறித்த
அனைத்துத்
தொடர்புக்கும் :

**எஸ். சந்திரன்**

18, செட்டி குளம்,
தருமராஜா கோயில்
தெரு,
பெரிய காஞ்சிபுரம்,
631502.



# ஒரு வார்த்தை

பாட்டாளி வர்க்க முன்னணியினர் கழகத்தின் (Proletariat Vanguard Organization--ProVA) உத்தியோக பூர்வ வெளியீடான ''நவ சகாப்தம்'' சஞ்சிகையை உங்கள் கைகளில் தவழவிடுவதில் பெருமை கொள்கிறோம் நவ சகாப்த வெளியீட்டகம்தான் ProVAவின் வெளியீட்டகமாகும். இலங்கைத்தீவின் பல்வேறு தடைகளின் மத்தியிலுங்கூட பாட்டாளி வர்க்க புரட்சிகர இயக்க செயல்பாடானது வளர்ச்சி பெற்று வருவது கண்டு மகிழ்ச்சி கொள்கிறோம். இலங்கைத் தீவின் ஒடுக்கும் தேசிய இனம் மத்தியிலும் இதற்கெதிராக போராடிவரும் ஒடுக்கப்படும் தேசிய இனம் மத்தியிலும் இவ்வளர்ச்சியை காணக்கூடியதாய் உள்ளது. இவ்வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதற்கும், நெறிப்படுத்துவதற்கும் அவசியமான அறிவியல் துறை சார்ந்த கடமைகளை செய்வதே PreVAவின் நோக்கமும் கொள்கையுமாகும். ProVAவின் கொள்கைப் பிரகடனத்தைப் பெறவிரும்புவோர், ''நவ சகாப்த வெளியீட்டகத்தின்' தொடர்பு விலாசத்துடன் தொடர்பு கொண்டு அதை பெற்றுக் கொள்ள முடியும்.

'நவ சகாப்தம்' பத்திரிக்கையின் வாசகர்கள் யார் என்பது இதில் இருந்து புரிந்து இருக்கும் என்று எண்ணுகிறோம். தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் தொடர்பாகவும், சிறிலங்கா புரட்சி தொடர்பாகவுமபாட்டாளிவர்க்க புரட்சிகர கருத்துகளை ஜனரஞ்சகப்படுத்த விரும்புகிறோம்; ஆனல் ஜனரஞ்சகவாதத்தின் (popul sm) பின்னல், இழுபட விரும்பவில்லை.

இனவாத பிரச்சாரங்களும் சுத்த இராணுவ வாத வீரப் பிரதாபங்களும், தேசிய வெறியை ஊட்டுவதுமே தமிழ் ஈழ விடுதலைப் போராட்டம் தொடர்பாக தமிழ் மக்கள் மத்தியிலும் சிங்கள மக்கள் மத்தியிலும் நிலவும் ஜனரஞ்சக

தொடர்ச்சி 28-ம் பக்கம் பார்க்க.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இராணுவ சுறுசுறுப்பு போலி வெளித்தோற்றமே! உண்மை உள்ளடக்கமோ தேக்கநிலை...

இலங்கையின் தற்போதைய
அரசியல் - இராணுவ நிலைமை பற்றிய
ஓர் ஆய்வு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1. 1986-ன் நடுப்பகுதியுடன் தமிழ் ஈழ போராளிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையே இருந்த இராணுவ சம நிலையில் ஒரு குணும்ச மாற்றம் ஏற்படத் தொடங்கியுள்ளது. இன்று வரை அது தொடர்கிறது. இம்மாற்றத்தின் காரணத்தால் இப்பிர தேசத்தில் தற்காலிக அரசியல், இராணுவ தேக்க நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது.

இராணுவ தேக்க நிலை இருவகைப்படும். ஒன்று, பதட்ட நிலை யுடன் கூடியது. மற்றையது, அமைதியானவை. திருகோண மலை, மட்டக்களப்பு, யாழ்பாணம் ஆகிய பிரதேசங்கள் முன்னைய துக்கு உதாரணங்கள். கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, பூநகரி ஆகிய பிரதேசங்கள் பின்னையதிற்கு உதாரணங்கள்,

தேக்கநிலை என்பதன் இராணுவ அர்த்தத்தை புரிந்துகொள்ள வேண்டுமானல், ஒரு தேசிய விடுதலை யுத்தத்தில் மூலோபாயரீதி யாக வெவ்வேறு கட்டங்களை புரிந்து கொள்ள வேண்டும். இது மூன்று கட்டங்களைக் கொண்டது.

2. 1-வது கட்டம் எதிரியின் மூலோபாயரீதியான தாக்குதலும் எமது மூலோபாயரீதியான தற்காப்பும் அடங்கியதாயிருக்கும்2–வது கட்டம் எதிரியின் மூலோபாயரீதியான பாதுகாப்பினதும் எமது எதிர் தாக்குதலுக்கான தயாரிப்பினதும் காலகட்டமாயிருக்கும். 3-வது கட்டம் எமது மூலோபாயரீதியான எதிர் தாக்குதலினதும் எதிரியின் மூலோபாயரீதியான பின்வாங்கலினதும் காலகட்டமாய் இருக்கும். "(மா-சே-துங் நீண்டகால யுத்தம் பற்றி) 'மூலோபாயம்' என்ற பதத்திற்கு யுத்ததந்திரம்" என்ற பதத்தையும் சிலர் பிரயோசிக் கிறார்கள்என்பதுஇங்குகுறிப்பிடப்படவேண்டும். இரண்டும் ஒன்றே யாகும். 'மூலோபாயம்', 'தந்திரோபாயம்', 'போர் நடவடிக்கை' என்ற மூன்று விதமான விஞ்ஞானங்கள், செயற்பாடுகள் ஒரு யுததத் தில் உண்டு.

மூலோபாயம், முழுமையான யுத்த நிலைமையைப் பற்றிய விஞ் ஞானமே யுத்த மூலோபாயமாகும். தமிழ் ஈழ பிரதேசத்தை தனி ஒரு முழுமையான யுத்த நிலைமையாக எடுக்கலாம். முழுஇலங்கைத

www.tamilarangam.net



தீவையும் தனி ஒரு முழுமையான யுத்த நிலைமையாக எடுக்கலாம் தெற்காசிய பிராந்தியத்தையும் தனி ஒரு முழுமையான யுத்த நிலைமையாக எடுக்கலாம்.

'தந்திரோபாயம்' என்பது குறிப்பிட்ட யுத்தமூலோபாயத்திற்கு உட்பட்டு, பிரதேச, கால காரணிகளால் வகுக்கப்பட்ட பகுதிகளில் யுத்தநிலைமை பற்றிய விஞ்ஞானமே 'தந்திரோபாயமாகும்'.

'போர் நடவடிக்கை' என்பது முன்கூறிய இரண்டிற்கும் உட்பட்ட, குறிப்பிட்ட ஒரு களத்திலோ, அல்லது, ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்ட பல களங்களிலோ நடைபெறும் ஆயுத மோதல்களே யாகும்.

3. தமிழ் ஈழ பிரதேசத்தை தனி ஒரு முழுமையான யுத்தநிலைமையாக எடுத்துக்கொண்டால், 1970-ன் முற்பகுதியில் இருந்து 1980-ன் நடுப்பகுதிவரை, குறிப்பாக 1984 வரையான காலகட்டம் சிறிலங்கா இராணுவத்தில் மூலோபாயரீதியான தாக்குதல்நிலைமை பேணி வைத்துக் கொண்ட கட்டமாகும். தமிழ் ஈழ போராளிகள் தம்மை வளர்த்துக் கொள்வதற்கான சாத்தியக் கூறுகளுடன் கூடிய மூலோபாயரீதியான தற்பாதுகாப்பில் இருந்த காலகட்டமாகும்.

போராளிகளின் மூலோபாயரீதியான தற்காப்பு நடவடிக்கை கால கட்டத்தில், தந்திரோபாயரீதியான பலதாக்குதல் நடவடிக்கைகளையும், போர் நடவடிக்கை ரீதியான பல தாக்குதல் நடவடிக்கைகளையும் மேற்கொண்டார்கள். சில வெற்றியடைந்தன; சில தோல்வியடைந்தன. ஆனாலும் மூலோபாயரீதியான தற்காப்பில் வளர்ச்சி பெற்றார்கள். சாவகச்சேரி போலீஸ் நிலையதாக்குதலும் யாழ் போலீஸ் நிலையதாக்குதலும், போர் நடவடிக்கை ரீதியான எதிர்தாக்குதலாகும். மூலோபாய ரீதியானஎதிர்தாக்குதலல்ல. இவை வெற்றிக்கான உதாரணங்கள். முல்லைத் தீவு இராணுவமுகாம், காரைநகர் கடற்படை முகாம் தாக்குதல்கள் தோல்வி பெற்ற எதிர் தாக்குதல் தன்மை கொண்ட போர் நடவடிக்கைகளாகும். போர் நடவடிக்கை ரீதியான எதிர் தாக்குதல்களின் இத்தோல்விகள் போராளிகளின் மூலோபாயரீதியான தற்காப்பு நடவடிக்கையின் தோல்வியாக மாறவில்லை. அவர்கள் மூலோபாயரீதியில் பின்வாங்கவும் இல்லை. போர் நடவடிக்கை ரீதியில் மாத்திரம் தோல்வி கண்டு பின்வாங்கினார்கள். யாழ் மாவட்டத்துள் எதிரியின் சுதந்திர நடமாட்டத்தை கொரில்லா தாக்குதல்களின் மூலம் அச்சுறுத்துவது என போராளிகள் மேற்கொண்ட நடவடிக்கை தந்திரோபாய

www.tamilarangam.net



ரீதியான தாக்குதலாகும். மூலோபாய ரீதியான தாக்குதல் அல்ல. இங்கும் போராளிகள் பாராட்டக்கூடிய வெற்றிகளைக் கண்டார்கள்.

இக்கால கட்டத்தில் எதிரி, மூலோபாய ரீதியான தனது தாக்குதல் நடவடிக்கையில் இருந்த வண்ணமே தந்திரோபாய ரீதியானதும், போர் நடவடிக்கை ரீதியானதுமான பல தற்காப்பு நடவடிக்கைகளை சில வேளைகளில் பின்வாங்கும் நடவடிக்கைகளைகூட மேற்கொண்டான். யாழ் மாவட்டத்தின் அனைத்து போலீஸ் நிலையத்தையும் மூடியது, தந்திரோபாய ரீதியான பின்வாங்கல். சில பிரதேசங்களில் முகாமுக்கு வெளியிலான இராணுவ நடவடிக்கைகள் அனைத்தையும் நிறுத்திவைத்தார்கள். முகாமை தாக்க வருபவர்களை மாத்திரம் எதிர்தாக்குதல் செய்வது என்ற கொள்கையை மிக திறமையாக பின்பற்றினார்கள். பூநகரி முகாமும், 4-ம் கட்டை முகாமும் (மன்னார் பூநகரி றோட்) இதற்கு சிறந்த உதாரணங்கள். இவை தந்திரோபாய ரீதியான தற்பாதுகாப்பாகும்.

இவ்விதமாக போராளிகள் பக்கத்தில் தந்திரோபாய ரீதியானதும் போர் நடவடிக்கை ரீதியானமான எதிர் தாக்குதல்கள் அதிகரித்தன. அவைகளில் பல வெற்றியும் பெற்றன. சிறிலங்கா இராணுவம் தந்திரோபாய ரீதியாகவும், போர் நடவடிக்கை ரீதியாகவும், தற்பாதுகாப்பு நடவடிக்கைகளில், சில வேளைகளில் பின்வாங்கல் நடவடிக்கைகளிலும் ஈடுபடும் வேகம் அதிகரித்தது. இருவர் பக்கத்திலும் ஏற்பட்ட இவ் எதிர்மறை அதிகரிப்புகளின் விளைவு, அளவு மாற்றம், குணாம்ச மாற்றமாகியது. தமிழ் ஈழ பிரதேச முழுமையான யுத்த நிலமை தனது மூலோபாய ரீதியான இரண்டாவது கட்டத்தில் பிரவேசித்தது. எதிரியின் மூலோபாய ரீதியான பாதுகாப்பினதும் போராளிகளின் எதிர்தாக்குதலுக்கான தயாரிப்புகளினதும் காலகட்டத்தினுள் பிரவேசித்தது, ஆகவே, 85 வரையான காலகட்டம் தேக்கநிலைக்கட்டமல்ல. யுத்தத்தில் முன்னேற்றமுள்ள கட்டமாகும்.

4. கொரில்லா யுத்தத்திற்கு இதற்காக நன்றி சொல்லிக்கொள்வோம். இராணுவ விவகாரத்துடன் நின்று நோக்கும்போது விடுதலை யுத்தத்திற்கு இருவடிவங்கள் உண்டு. ஒன்று கொரில்லா யுத்தம், மற்றது கிரமமான யுத்தம். இரண்டும் இருவகையான படைவடிவங்களை வேண்டி நிற்கின்றது. ஆரம்ப வடிவம் கொரில்லா யுத்தம். பின்னர் அது வளர்ச்சியுற்ற கிரமமான யுத்தமாக மாறுகின்றது. இறுதி வெற்றிவரை கொரில்லா யுத்தம் இருக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கும். ஆனால் ஆரம்பத்தில் அதுவே பிரதான வடிவமாயும் பின்அது கிரமமான யுத்தத்தின் துணை அம்சமாகவும் மாறும். கொரில்லா யுத்தத்தின் நோக்கம் எதிரியின் படைப்பிரிவுகளை அழித்தொழிப்ப தல்ல. சில இராணுவ வீரர்கள் சாகலாம். இது படைப்பிரிவுகளை அழித்தொழிப்பதாகாது. எதிரிக்கு பயப்பிராந்தியத்தை ஏற்படுத்து வதும், அவனின் சுதந்திர நடமாட்டத்தை கிலி கொண்டதாக்குவது மேயாகும். கிரமமான யுத்தத்தின் துணை அம்சமாக செயற்படும் போது அதன் பலமும், பங்கும் இன்னும் அதிகமானதாக இருக்கும். கிரமமான யுத்தம் இருவகைப்படும். ஒன்று நடமாட்ட யுத்தம், மற்றையது ஸ்தான யுத்தம். நடமாட்ட யுத்தம் என்பது விடுதலை படையின் கிரமமான சேனையும் தொடர்ச்சியான அசைவில் இருக் கும் எதிரியின் படையையும் இவ்வித நிலைக்குள்ளாக்கும். தனக்கு சாதகமான காலமும் இடமும் வாய்க்கும்போது கொரில்லாப்படை யின் துணைக்கொண்டு எதிரியை விடுதலைப் படையின் கிரமமான சேனை தோற்கடிக்கும். இத்தோல்வி எதிரியை முற்றாக அழித் தொழிப்பதாய் இருக்கலாம் அல்லது அவனின் இராணுவத்தை நிர் மூலமாக்குவதாகவோ அல்லது சீர்குலைப்பதாகவோ இருக்கலாம். தமிழ் ஈழ பிரதேசத்தில் இதுவரை நடமாட்ட யுத்தம் எதுவும் நடை பெறவில்லை. எதிரி தனது நடமாட்டத்தில் இருக்கும்போது அவனுக்கு எதிராக கொரில்லா தாக்குதல்கள் தொடுக்கப்பட் டுள்ளன. அவை வெற்றியும் பெற்றுள்ளன. ஆனால் கிரமமான யுத்தம் எதுவும் நடைபெறவில்லை. கிளிநொச்சி கல்மடுக்களத்தில் தனது நடமாட்டத்தின்போது தானாக வந்து மாட்டிக்கொண்ட போதும்கூட போராளிகளால் அவனுக்கெதிரான ஒரு கிரமமான யுத்தத்தை தொடுக்க முடியவில்லை.

தமிழ் ஈழபிரதேசத்தைப் பொறுத்தவரை, அதன் பூகற்ப-இரா ணுவ நிலைமைகள் நடமாட்ட யுத்தத்திற்கான சாத்தியப்பாடுகளை குறுக்கியேயுள்ளன. நீண்ட நெடும் கடற்பரப்பும், தென் இலங்கைக் கும், தமிழ் ஈழத்திற்கும் இடையே அமைந்துள்ள நீண்டு செல்லும் நில எல்லையும் அவனின் நடமாட்டத்திற்கு சாதகமாய் உள்ளன. தமிழ் ஈழ தரைமார்க்கமாய்தான் அவன் தனது படைகளை நகர்த்த வேண்டும் என்ற நியதியில்லை. அத்துடன் எந்தவொரு போர் நட வடிக்கையும் சில நூற்றுக்கணக்கான இராணுவ வீரர்களை மாத் திரமே வேண்டி நிற்பதால் ஆகாயமார்க்கமும் எதிரியின் நடமாட்ட மார்க்கத்தில் ஒன்றாய் இருந்து வருகின்றது. எவ்விதமிருந்தும் படை நடமாட்டத்திற்கான அவசியம் எதுவும் எதிரிக்கு இல்லை என்பதாகாது. அவனுக்கு அத்தேவை உண்டு. ஆனால் அது குறுக்கப்பட்டுள்ளது. வன்னிப்பிரதேச பூகற்ப இராணுவ நிலமை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கள் நடமாட்ட யுத்தத்திற்கு சாதகமானவை. ஆனால் போராளிகள் பக்கத்தில் கிரமமான யுத்தமுறைப் பண்பு இன்மையால் எதுவித எதிர் தாக்குதலும் இன்றியே எதிரி நடமாடுகிறான்.

ஸ்தான யுத்தத்தை எடுத்துக்கொள்வோம். குறிப்பிட்ட இடத்தில் ஒப்புநோக்கில் நிரந்தரமாக முகாமிட்டிருக்கும் எதிரியை நாமே வலியச் சென்று கிரமமான யுத்தமுறையின் மூலம் தாக்குதல், ஆரம்பத்தில் போலீஸ் நிலையங்களின் மேலும், காவல் நிலையங்களாக விளங்கிய சிற்சிறு இராணுவ முகாம்கள் மேலும் தொடுத்த தாக்குதல்கள் வெற்றிபெற்றன. இவை ஸ்தான யுத்தத்தின் முனைவடிவம் என்று கூறலாம். கொரில்லா படைக்கூறுகளைக் கொண்டு கொரில்லா யுத்த முறையை பிரயோகித்து நடைபெற்ற ஸ்தான யுத்தம் என்று இவற்றை கூறலாம். ஆனால் ஸ்தான யுத்தத்தின் இந்த ஆரம்ப வடிவைத்தாண்டி போராளிகளால் முன்னேற முடியவில்லை. போலீஸ் நிலையங்களின் மேலான தாக்குதலில் இருந்து அனுபவம் கற்றுக்கொண்ட எதிரி தனது நடவடிக்கைகளில் மாற்றம் ஏற்படுத்தினான். போலீஸ் நிலையத்தையும் இராணுவ முகாமையும் இணைத்துகூட்டு நிலையங்களை அமைத்தான். இவ்வித நிலையங்களின் மேலும், இராணுவ முகாம்கள் மேலும் தொடுக்கப்பட்ட தாக்குதல்கள் அனைத்தும் தோல்வியையே கண்டது. கிளிநொச்சிப் போலீஸ் நிலையத்திற்கு எதிராக மூன்று தடவை முயற்சிக்கப்பட்டது. மூன்றும் தோல்வியே; காரைநகர் கடற்படை முகாம், முல்லைத்தீவு இராணுவ முகாம், வவுனியா போலீஸ் நிலையம் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டு. கிரமமான யுத்தமுறை பின்பற்றப்படாததே இதற்கான காரணமாகும்.

5. அரசியல்—இராணுவ விவகார அர்த்தத்தில் பார்த்தால் யுத்தம் இரு வகைப்படும். ஒன்று "முன்னணிபடை" யுத்தமுறை, மற்றையது "மக்கள் யுத்தமுறை" இரு யுத்தமுறையும் யுத்தத்தின் இருவடிவங்களான கொரில்லா யுத்தத்தையும், கிரமமான யுத்தத்தையும் ஏற்கின்றனர். இதில் இவர்களிடையே வேறுபாடு இல்லை. வேறுபாடு இதைவிட பாரதூரமானது. மக்கள் யுத்தத்திற்கான ஒரு மிகத்தரமான எடுத்துக்காட்டாக இன்று உலக புரட்சியாளர்கள் அனைவராலும் முரண்பாடின்றி ஏற்றுக் கொள்ளப்பட்டது சீன யுத்தமும், வியட்நாம் யுத்தமுமாகும். அதிலும் குறிப்பாக வியட்நாம் யுத்தமாகும். இதன் படிப்பினைகளை வைத்துக் கொண்டும், தமிழ் ஈழ போராளிகளின் படிப்பினைகளை வைத்துக் கொண்டும் இவ்விரு யுத்த முறையையும் ஒப்பிடுவோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| மக்கள் யுத்த முறை | ''முன்னணிபடை'' யுத்தமுறை |
|---|---|
| 1) கட்சிதான் முன்னணிப் படை; அரசியல் அர்த்தத்தில் இராணுவம் ஒரு முன்னணிப் படை அல்ல. அது ஒரு கருவி' கட்சியின் கருவி மாத்திரமே யாகும். கட்சியும்கூட பாட்டாளி வர்க்க சித்தாந்தால் ஆயுதபாணி யானது. ஆகவே அது முழுகுழுக் களின் முன்னனிப்படையல்ல· அரசியல் அர்த்தத்தில் அது பாட்டாளி வர்க்க முன்னணிப்படை இவ்வித அரசியல் முன்னணிப் படை மக்களில் இருந்து பிரிந்த தொன்றல்ல. சித்தாந்த வளர்ச்சியிலும், நடைமுறைச் செயற்பாட்டிலும் இது மக்களை விட உயர்வானதொன்று. ஆனால் மக்களைவிட மேலானதொன்றல்ல. இது ஸ்தாபன ரீதியாக மக்களுடன் பின்னிப் பிணைக்கப்பட்ட ஒரு அரசியல் தலைமையாகும். | 1) மக்களுக்காக, மக்களின் நலன்களை நிறைவேற்றும் நோக்கம் கொண்ட பலதனிநபர்களின் கூட்டு. மக்களில் இருந்து பிரிந்து, தனித்து, மக்களின் மேல் இருக்கும் ஒரு கூட்டம், மக்கள் சொந்த பலம் இல்லாதவர்கள் என்று கருதுவார்கள். ஆகவே அனைத்தும் மேலிருந்துதான் செயயப்படவேண்டும், என்று கருதுவார்கள். இதனால் தம்மேல் மாத்திரமே இவர்களுக்கு நம்பிக்கை. தமது இராணுவ பலத்தின் அதிகரிப்புக்கு ஒப்ப மக்கள் மேல் செலுத்தும் ஆணையும் அதிகரிக்கும். |
| 2) இராணுவம் அரசியல் கட்சியின் தலைமையில் இருக்க வேண்டும். | 2) அரசியல் கட்சியின் தலைமையை நிராகரிப்பது மாத்திரமல்ல; தானும் ஒரு அரசியல் தலைவனாக இருப்பதைக்கூட நிராகரிக்கின்றது. |
| 3) கட்சிக்கும் இராணுவத்துக்கும்இடையேயான இணைவு பிரிக்கமுடியாத ஒரு முழுமையாகவுள்ளது. அமைப்பு ரீதியாக இது ஒன்றிணைக்கப்பட்டுள்ளது. | 3) இராணுவத்துள் சில அரசியலாளர்கள் இருப்பார்கள்· இராணுவத்திற்கு அரசியல் ஆலோசனை வழங்குவதும் இதன் செய்கைகளை அரசியல் ரீதியில் நியாயப்படுத்துவதுமே இவர்கள் கடமையாகும். மன்னர் மண்டப ஆஸ்தான கவிஞர்களைப்போல் இருப்பார்கள். |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



| மக்கள் யுத்த முறை | ''முன்னணிப்படை'' யுத்தமுறை |
| --- | --- |
| 4) அரசியல் போராட்டத்தின் ஒரு கட்டமே ஆயுதப் போராட்டம். அத்துடன் அதன் ஒரு வெளிப்பாடுமாகும். அது மாத்திரமல்ல ஒரு தற்காலிக வடிவம். ''யுத்தம் என்பது இரத்தம் சிந்தும் அரசியல், அரசியல் என்பது இரத்சம் சிந்தாத யுத்தம்'' என்று கூறுவார்கள். | 4) யுத்தம் ஒரு நிரந்தர வடிவம். அது ஒரு தனிவிசேட வடிவம். |
| 5) அரசியல் போராட்டத்தையும் ஆயுதப் போராட்டத்தையும் இணைப்பதிலும், பொருளாதார போராட்டத்தையும் ஆயுதப் போராட்டத்தையும் இணைப்பதிலும் வல்லமை. | 5) இதுபற்றி நாட்டமேயில்லை. ஆயுதம் போராட்டமே அனைத்தும். |
| 6) தமது தாய்பூமியை இராணுவ ஆக்கிரமிப்புச் செய்துள்ள அந்நிய எதிரிக்கு எதிராக நாட்டின் முழு மக்களையும், தனி ஒரு மனிதன்போல் ஐக்கியமுறச் செய்வதிலேயே நாட்டம் அதிகம். இதுவே வெற்றிக்கு அடிப்படையான உத்திரவாதம். தாமே அதற்கான வழியை அமைப்பவர்களாகவும் முன்னோடிகளாகவும் இருப்பதில் ஆழ்ந்த கவனம். | 6) ஐக்கிய உணர்வேயில்லை. ஏனையவர்களோ மக்களோ ஸ்தாபனப்படுவது கண்டு அச்சம். தமதுஸ்தாபனம் மாத்திரம் தான் செயல்படவேண்டும் என்பதை ஒவ்வொருவரினதும் கருத்தாகும். |
| 7) மக்களை ஸ்தாபனப்படுத்துவதன் மூலமே அரசியல், இராணுவம், பொருளாதாரம் ஆகிய மூன்று போராட்டங்களும் ஒன்றிணைக்கப் படுகின்றன. இந்நிகழ்ச்சியால் கிரமமான சேனை தான் சார்ந்து நிற்பதற் | 7) ''ஆயுதமேந்திய முன்னணி படையினரே அனைத்தும்'' இராணுவ நடவடிக்கைகளே, தமது படையின் நலனுக்காக பொருளாதார உற்பத்திகளில் ஈடுபடுவார்கள். தாம் மக்களிடமிருந்து பொருளாதாரம் |

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**மக்கள் யுத்த முறை**

கான பலமான அடித்தளத்தைப் பெறுகின்றது. மக்கள் இரா ணுவ ரீதியிலும் ஸ்தாபனப்படு கிறார்கள். இதனால் கிரமமான சேனை தனக்கென்றோர் ஆயுத பாணியான சகாவையும் பெற் றுக்கொள்கிறது.

8) மக்களை சார்ந்திருத்த லால் கொரில்லா யுத்தம் கிரம மான யுத்தமாக படிப்படியாக வளர்ச்சியுறும். மூலோபாய ரீதி யான ஸ்தலயுத்தம் என்ற மட் டத்திற்கு இது வளரும். அதே நேரத்தில் கொரில்லாயுத்தத்தை கிரமமான யுத்தத்தின் துணை வனாகஇணைப்பதில் ஆற்றலும் இருக்கும்.

**''முன்னணிபடை'' யுத்தமுறை**

பெறுவதற்காக மக்களை அணி திரட்டுவார்கள். அதேபோல் தமது நிரந்தர படைக்கு இரா ணுவ சேவகம் செய்வதற்காக சிலருக்கு ஆயுதம் வழங்கி அணி திரட்டுவார்கள். அத்துலத் முத லியால் அமைக்கப்பட்ட ரூடிப் படைகளுக்கும் நிரந்தர ராணு வத்திற்கும் உள்ள உறவை இங்கு உவமானம், கூறுவதில் எந்தவித தவறும் இல்லை.

8) மக்களை சார்ந்திராத தால் ராணுவ செயற்படுதிறன் எல்லைப்படுத்தப்பட்டது. குறிப் பிட்ட கட்ட ராணுவ திற னுக்கு அப்பால் வளர்ச்சி பெற முடியாதது. கொரில்லா யுத் தத்தை கிரமமான யுத்தம் என்ற கட்டத்திற்கு வளர்த்தெடுக்கும் தன்மையில்லை. இதனால் கொரில்லா யுத்த வடிவை தாண்ட முடியாது அல்லலுறு வர். தமது ராணுவ திறனை அதிகரிப்பதற்காக கொரில்லா சேனையை நவீன கருவிகளா லும், நவீன போர் யுக்திகளினா லும், நிறைக்க முற்படுவர். ஒரு குறிப்பிட்ட எல்லைக்கப்பால் கொரில்லா சேனையால் இதை உள்வாங்குவதற்கான எல்லை கள் எதையும் கொண்டிராத தாகும். இவ் யுத்தமுறையை பின்பற்றும் மற்றோர் பிரிவினர் கொரில்லாயுத்தத்தை நிரா கரித்து கிரமமான யுத்த முறையை மாத்திரம் பின்பற்று வர். இவர்கள் தமது கிரமமான

www.tamilarangam.net



| 'மக்கள் யுத்த' முறை | 'முன்னணிப் படையுத்த' முறை |
| --- | --- |
| | சேனையை தமது மக்களைச் சார்ந்து உருவாக்காதபடியால் அது கருச்சிதைவுறும், அல்லது முட்டையை விட்டு வெளிவந்த கணமே அழிக்கப்பட்டு விடும். இப்பிரிவினரின் கொரில்லா யுத்தப்பிரிவினர் நின்று பிடிக்கும் அளவிற்கு இவர்களால் நின்று பிடிக்க முடியாது. |
| 9) தமது சொந்த நாட்டில் நடைபெறும் விடுதலைப் போராட்டத்தையும், தம்மை ஆக்கிரமித்துள்ள நாட்டு மக்களின் புரட்சிகர போராட்டங்களுடனும் நிறையவே தொடர்புகள் ஏற்படுத்துவார்கள். | 9) அந்த நோக்கு இல்லை. சிங்கள மக்கள் மத்தியில் புரட்சிகர இயக்கங்களின் வளர்ச்சிக்கு பாதகமான அரசியல் விளைவுகள் ஏற்படக்கூடிய முயற்சிகளில் தெரிந்திருந்தும் ஈடுபடுவர். |
| 10) வர்க்க அபிலாசைகளில் உழைக்கும் மக்கள் இவ் ராணுவத்தை தமது சொந்த இராணுவமாகவே காண்பார்கள். தேசிய அபிலாசைகளின் அடிப்படையிலும் மக்கள் இதனுடன் ஒரு அந்நியோன்ய தன்மையையே காண்பார்கள். | 10) வர்க்க அபிலாசைகளின் அடிப்படையில் மக்கள் இதற்கும் முன்பிருந்த முதலாளித்துவ போலிஸாருக்கும் இடையே எந்த வேறுபாட்டையும் காண மாட்டார்கள். இவ் ராணுவத்தில் இருந்து மக்கள் அந்நியமாகியே நிற்பார்கள். தேசிய அபிலாசைகளின் அடிப்படையில் மக்கள் இந்த ராணுவத்துடன் ஒரு நல்லுறவைக் காண்பார்கள் ஆனால் அது அந்நியோன்ய உறவாக இருக்கமாட்டாது. |

தமிழ் ஈழ பிரதேசத்தில் பின்பற்றப்பட்டது ''முன்னணிபடை'. யுத்தமுறையேயாகும். இதுவே மேலாதிக்கம் செலுத்தியது' எல்.டி.டி.ஈ. இதன் கொரில்லா யுத்தபிரிவின் தலைமை அங்கம். பிலாட் இதன் கிரமமான யுத்தபிரிவின் தலைமை அங்கம். எல்.டி.டி.ஈ.யின் யுத்தமுறையே இன்று தீர்க்கமான யுத்த நடை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முறைச் செயற்பாடாக இருந்துவருகின்றது, பிலாட் இன் யுத்த முறை கருச்சிதைவு அடைந்துவிட்டதா என்ற சந்தேகம் தோன்றுகின்றது. ஏனைய போராளிக்குழுக்கள் இப்பிரிவில் ஏதோ ஒன்றையோ அல்லது ஓரளவு அப்பிரிவையும் ஓரளவு அப்பிரிவையும் சார்ந்ததேயாகும். எதுவுமே மக்கள் யுத்தபிரிவைச் சார்ந்தவையாக மாறவில்லை.

6. கொரில்லா யுத்தவகையானது கிரமமான யுத்தவகையாக மாறுவதற்கு ''முன்னணிபடை'' யுத்தமுறை ஒரு எல்லைப்படுத்தும் காரணியாக இருந்து வந்துள்ளது. இதை மேலும் யுத்த நடவடிக்கைகளுடன் விளக்குவோம். எந்த ராணுவமுகாமையும் தாக்கியழிக்கும் சக்தியை போராளிக்குழுக்களால் பெறமுடியாது போய்விட்டதை முன்னர் அவதானித்தோம். கிரமமான யுத்தத்தில் போராளிகளின் பலவீனத்தை எதிரி சரியாக இனங்கண்டு கொண்டான். துணை அங்கமாக செயற்படும் திறனற்ற கொரில்லா யுத்தம் மாத்திரமே போராளிகளின் பலம் என்பதை எதிரி இனங்கண்டுகொண்டான். ராணுவ முகாமைவிட்டு எதிரியை வெளிவராமல் செய்யும் ராணுவத் திறனைத்தான் போராளிகள் பெற்றிருந்தார்கள். கொரில்லா தாக்குதலின் மூலம் இதுமுடியும். அதுவும் ஏனைய பிரதேசங்களில் சாத்தியப்படவில்லை. யாழ் குடாநாட்டினுள் மாத்திரமே இது சாத்தியப்பட்டது. இது ஏன் என்பதை பின்பு அவதானிப்போம். இந்நிலையை தெரிந்து கொண்ட எதிரி தமிழ் ஈழமெங்கனும் முகாம்கள் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டான். யாழ் குடாநாடு தவிர்ந்த ஏனைய பகுதிகளில் வெற்றியும் கண்டான். தந்திரோபாயரீதியான தற்பாதுகாப்பின் பக்கத்தில், இவ்விதமான முகாம்கள் உகந்தவை என்பது ஒரு நிலைப்பாடு, மூலோபாயமான தாக்குதலின் பக்கத்தில் நடமாடும் யுத்தத்தை பிரயோகித்த கொரில்லாக்களின் பிரதேசங்களை தாக்குவதற்கு இவ்விதமான முகாமிடுமுறை அவனுக்கு வாய்ப்பானதாய் இருப்பது மற்றோர் நிலைப்பாடாகும், வன்னிப்பகுதியில் நடந்த ராணுவ சுற்றிவளைப்புகள் இதற்கு உதாரணங்களாக அமைகின்றன. கிரமமான யுத்தத்தில் போராளிகளின் தம்மை திறமைசாலிகளாக்கியிருப்பார்களானால் கூடாரமிட்டு முன்னேறுவதன் மூலம் தனது மூலோபாயரீதியான தாக்குதல் நிலையை நிலைநிறுத்தி வைக்க அவன் வகுத்துக்கொண்ட யுத்த யுக்திகளை தவிடுபொடியாக்கியிருக்க முடியும். பிரமாண்டமான பாதுகாப்புடன் கூடிய ராணுவ முகாம்களிலேயே அவனை எல்லைபடுத்தி, அடிக்கடி நடமாடவேண்டிய அவசியத்தை அவனுக்கு ஏற்படுத்தி நடமாட்ட யுத்த முறையையும் வளர்த்திருக்கலாம்.கொரில்லா முறைக்கும் மேலும் வேலைகொடுத்திருக்கல

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த யுக்தி தெரியாதிருக்கவில்லை, தெரிந்து கொண்டார்கள். அதை உடைக்கும் முயற்சியிலும் இறங்கினார்கள். ஆனால் அவர் களால் முடியவில்லை. அவர்களின்சொந்தப்பலவீனமே அவர்களின் ராணுவ திறனுக்கு எல்லைப்படுத்தும் காரணமாக அமைந்தது இன்னும் அமைந்து வருகிறது.

7) தமிழ் ஈழ போராளிகளின் இவ்வளவு குறைபாடுகளின் மத்தியிலும் கூட கொரில்லா யுத்தத்தின் வீச்சினால் எதிரில் மூலோபாய ரீதியான தாக்குதல் என்ற கட்டத்தில் இருந்து மூலோபாயரீதியான பாதுகாப்பு என்ற கட்டத்தை நோக்கித்தள்ளப்பட்டான். கொரில்லா யுத்தத்தில் விடாப்பிடியாக இருந்த அனைத்து போராளிக்குழுக்களுக்கும் தமிழ் ஈழ மக்கள் இதற்காக நன்றி தெரிவிக்கவேண்டும். போராளிகளுக்கிருந்த பின்வரும் சாதக அம்சங்கள் அவர்களின் பலவீனத்தை வெற்றி கொள்வதற்கு உதவியுள்ளன.

அ) சிறிலங்கா அரசின் இன ஒழிப்புக் கொள்கையால் தமிழ் மக்கள் போராளிக்குழுக்களுக்கு வழங்கிவந்த நிபந்தனையற்ற ஆதரவு. 1983—களின் முற்பகுதி வரையே இது இவ்விதம் இருந்தது.

ஆ) சிறிலங்கா ராணுவ துருப்புகள் சிங்களவர்களாய் இருந்தபடியால் அவர்கள் இப்பிரதேச மக்களுடன் தொடர்பு கொள்ள முடியாதிருந்தமை. 1985—ல் இருந்து சிறிலங்கா ராணுவம் தமிழ் தெரிந்தவர்களையும், முஸ்லீம்களையும் உள்ளடக்கிய இராணுவ அணியையே கிழக்குமாகாணத்திற்கும் வன்னிப்பிரதேசத்திற்கும் அனுப்பியதை இங்கு குறிப்பிடவேண்டும்.

இ) தமிழ் போலீஸாரும், ராணுவத்துள் இருந்த தமிழரும் மறைமுகமாக போராளிகளுக்கு ஆதரவாக இருந்தமை. 1983-ல் இனக்கலவரத்தின் பின் சிறிலங்கா ராணுவத்துள் இனவாதம் செயற்படுவதற்கான வாய்ப்புகள் மிகவும் குறைந்துள்ளது கவனிக்கப்படவேண்டியது.

ஈ) இந்திய மக்களின் ஆதரவு குறிப்பாக இந்திய தமிழ் மக்களின் ஆதரவு போராளிகளுக்குத் தாராளமாகவே இருந்தது. அவ் உறவில் 1984 வரை எந்த களங்கமும் ஏற்படவில்லை.

உ) இந்திய அரசுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே இருந்த உறவின் தன்மையும் தமிழ் ஈழ போராளிகளுக்கு சாதகமாக இருந்தது. இந்திராகாந்தியின் மறைவுக்கு பின்பே இந்திய —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இலங்கை உறவில் போராளிகளுக்கு பாதகமான அம்சங்கள் தோன்றத் தொடங்கின என்பதுவும் கணக்கில் கொள்ளப்பட வேண்டிய தொன்றாகும்.

8) அதேபோல் எதிரி பல பாதக நிலமைகளுக்கு முகங்கொடுத்தான். அவை போராளிகளின் வெற்றிக்கான காரணங்களாக இருந்தன. அவை ஆவன ;

அ) இந்திய அரசை வெளிப்படையாக பகைக்கமுடியாத நிலைமை, அதேபோல் இந்திய அரசுடன் ஒரு நேச உறவுக்கு வரக்கூடிய வாய்ப்புகளும் இருக்கவில்லை.

ஆ) வெளிப்படையான சர்வதேச ஆதரவின்மை. சிறிலங்கா அரசுக்கு ஆதரவு வழங்கிய நாடுகள் கூட தமது ஆதரவை வெளிப்படையாக அரசியல் ரீதியில் தெரிவிக்க முடியாத நிலைமை. 1977ல் இருந்து 1984 வரை காடையர்கள் மூலம் நடைபெற்ற இனப்படுகொலைகள் சிறிலங்கா அரசின் அந்தஸ்துக்கு எதிரானதாகவே இருந்தது. 1984—ன் பின் இனப்படுகொலைகள் பயங்கரவாதத்தை அடக்குவது என்ற பெயரில் நடைபெறுகிறது. ராணுவமே இதை செய்கிறது. காடையர்கள் அல்ல என்பதை நோக்கவேண்டும்.

இ) சிறிலங்கா ராணுவம் கட்டுப்பாடற்ற இனப்படுகொலைகளை நடத்தகூடிய தன்மை கொண்டிருந்ததே தவிர, திட்டமிட்ட முறையில் கொரில்லா யுத்தத்தை நடாத்தக் கூடியதாக இருக்கவில்லை.

ஈ) தமிழ் ஈழ மக்கள் மத்தியில் இருந்து சிறிலங்கா அரசுடன் ஒத்தூதி விளையாடக்கூடிய சந்தர்ப்பவாத அல்லது சரணடைவு வாத தலைவர்களை கண்டுபிடிக்க முடியாது போனமை. 1983வரை தமிழ் விடுதலைக் கூட்டணி இந்த கடைகெட்ட கைங்கரியத்தை ஆற்றியது. அவர்களும் 1977-ல் இருந்தே செல்வாக்கிழந்தவதகளாகவே காணப்பட்டார்கள்.

உ) 1985 வரை காடையர்களால் நடத்தப்படும் இனப்படுகொலைகளை தடுத்து நிறுதத முடியாமல் இருந்தமை. இது போராளிகளுககு சாதகமானதும், சிறிலங்கா துருப்புகளுக்கு பாதகமானதுமான நிலமையை தோற்றுவித்தது.

ஊ) தமிழ் ஈழபோராளிகளை அழித்தொழிப்பதற்கானமுயற்சி மறுபுறம். இவை இரண்டும் போதாதென்று சிங்கள மக்கள் மத்தியில் இருந்து தோன்றும் ஜனநாயக சக்திகளை அடக்குவதற்கான முயற்சியும் சேர்ந்து கொண்டமை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இக்காரணிகள் தமிழ் ஈழ விடுதலைப் போராளிகளின் மேலான சிறிலங்கா அரசின் செயற்பாட்டை எல்லைப்படுத்தும் காரணிகளாக இருந்தன.

9) 84-ம் ஆண்டின் பிற்பகுதியுடன் தமிழ் ஈழ தேசியவிடுதலை யுத்தம் தனது 2-ம் கட்டதத்துள் பிரவேசிக்கின்றது. சிறிலங்கா இரா ணுவம் மூலோபாய ரீதியான பாதுகாப்பை நோக்கி நகர்ந்துவிட்ட தும், போராளிகள் மூலோபாய ரீதியான எதிர் தாக்குதலுக்கான தயாரிப்பை நோக்கி நகர்ந்த்துமே இக்காலகட்டமாகும்.

இந்த இரண்டாம் கட்டம் மூன்று விதமான பிரதேசங்களைக் கொண்டதாக இருத்தது.

1-வது வகை - எதிரியின் தளப்பகுதிகள், கிழக்குமாகாணத்தின் சில பகுதிகளும், வடமாகாண எல்லை பிரதேசங் களும்.

2-வது வகை - கெ ரில்லா யுத்தத்திற்கான போராளிகளின் தளப்பகுதி யாழ்குடா நாடும், வன்னியின் உட் பிரதேசங்களும்.

3-வது வகை - இரு தரப்பும் போட்டியிடும் கொரில்லா பிர தேசம். திரிகோணமலையும், மட்டக்களப்பும்.

இந்த இரண்டாவது கட்டம் தேசிய விடுதலை யுத்தத்தில், நீண்டகால யுத்தத்தில் முக்கிய பகுதியாகும். எதிரியை துரத்தி அடிப்பதற்கான தயாரிப்புகள் செய்யவேண்டிய காலகட்டமாகும். போர் நடவடிக்கைகள் எதுவும் அற்ற காலகட்டமல்ல, மாறாக போர் நடவடிக்கைகள் மிக நிறைந்த காலகட்டமாகும். மூலோபாய ரீதியான பாதுகாப்பு நிலைக்கு தான் வந்துவிட்டதை உணர்ந்த எதிரி மீண்டும் தன்னை மூலோபாய ரீதியான தாக்குதல் நிலைக்கு நகர்த்திச் செல்ல ஜீவமரண போராட்டத்தில் ஈடுபடுவான். இதில் அவன் வெற்றியடையவில்லையானால் அவனுக்கு முன்னால் உள்ள ஒரே ஒரு மாற்றுவழி பின்வாங்குதலே யாகும். ஆகவே அவ னுக்கு இக்கட்டம் ஒருஜீவமரண போராட்டக் கட்டமாகும்.போராளி களின் இராணுவ முகாம்களை அழித்தொழிக்கவும், இராணுவகேந் திர நிலையங்களை கைப்பற்றி அல்லது சின்னாபின்னப்படுத்த இரா ணுவ ஆதரவு பிரதேசங்களை அதாவது கொரில்லா பிரதேசங்களை துவேசம் செய்ய முற்படுவான். ''மலையைக் கெல்லி எலியைப் பிடிச்தாற்போல'' ஒரு போராளியை கொல்வதற்காக ஒரு கிராமத் தையே அழிக்க தயங்கமாட்டான். எதிரியின் மூலோபாயரீதியான

www.tamilarangam.net



தற்காப்பு கட்டத்தைவிட இக்கட்டம் தந்திரோபாயரீதியான தாக்கு தல்கள் மிக்கதாகவும், துவமசம் செயயும் போர்நடவடிக்கைகள் மிக்கதாகவும் இருக்கும்.

எதிரி தனது கடமைகளை சரியாகவே செய்தான். தமிழ் ஈழ போராளிகளின் கொரில்லா பிரதேசமாக இருந்தமன்னார், வவுனியா போன்ற பகுதிகளை முதலில் தனது கட்டுப்பாட்டின்கீழ் கொணர்ந் தான். அப்பிரதேசத்தில் பேரழிவுகளை ஏற்படுத்தினான். தனது நிலையை பலப்படுத்தினான். போராளிகளை மேலும் உள்நோககி தள்ளிவிட்டான். நகரிலும் நகரைச் சூழ்ந்த பகுதியிலும் பிரதான வீதிகளில் போராளிகளின் சுதந்திர நடவடிக்கையை தடைசெய் தான். போராளிகளுடன் போட்டியை தவிர்த்து தன்னைப் பலப்படுத் தவும், அரசியல் ரீதியில் அப்பிரதேச மக்களுடன் நெருங்கிச் செல்ல வுமான கால அவகாசத்தை உருவாக்கிக் கொண்டான். பல சிறு முகாம்களை நிறுவுவதற்கும் தயங்கவில்லை. அடுத்தசாக முல்லைத் தீவு. இம்மூன்று பிரதேசங்களின் வெற்றி; கிளிநொச்சியை எது வித விசேட ராணுவ முயற்சிகள் எதுவும் இன்றி எதிரியின் கை ச மாக்கியது. இதே நேரத்தில் இருபகுதியினரும் போட்டியிட்ட வண்ணம் இருந்த மட்டக்களப்பும் 86-ன் நடுப்பகுதியில் பெரும் அழிவுக்குள்ளாகிறது. அங்கும் எதிரி தனது இழந்த நிலையை மீட் பதில் கடினமான போர் நடவடி கைகளை மேற்கொண்டான். இப் பிரதேசங்களில் எல்லாம் எதிரி தனது பழைய நிலையை மீண்டும் அடைந்துவிட்டான். போராளிகளும் இப்பிரதேசங்களில் தற்பாது காப்பு நடவடிக்கை என்ற தனது பழைய நிலையை அடைந்துவிட் டார்கள். ஆனாலுங்கூட இன்னமும் எதிரி மூலோபாய ரீதியில் தாக்குதல் என்ற கட்டத்தை அடையவில்லை. அதேபோல் போரா ளிகளும் மூலோபாயரீதியில் தற்பாதுகாப்பு என்ற கட்டத்தை எய்த வில்லை. காரணம்? யாழ்பாணப்பிரதேசத்தில் 87-ல் ஆரம்பம் வரை எதிரி மூலோபாயரீதியான பாதுகாப்பு என்ற கட்டத்திலேயே இருந் ததுவேயாகும்.

சிலவேளைகளில் ஒரு யுத்தத்தில் தனி ஒரு போர் நடவடிக்கை அல்லது தனி ஒரு தந்திரோபாய நடவடிக்கை யுத்தத்தின் முழுமை யான நிலமையிலும் ஒருகுணாம்ச மாற்றத்தை ஏற்படுத்தி விடுவதை நாம் அவதானிக்கலாம். தமிழ் ஈழ விடுதலை போராட்டத்தின் நிலைமை யாழ்பானத்தை அந்த நிலைக்கு உள்ளடக்கி வி டது. யாழ்ப்பாணம் வெல்லப்படுமானால் சிறிலங்கா இராணுவம் மீண்டும் தனது மூலோபாயரீதியான தாக்குதல் நிலையை அடைந்துவிடும். போராளிகளின் மூலோபாயரீதியான தற்காப்பு நிலைக்கு உள்ளாகி விடுவார்கள். இந்நிலமையை பயன்படுத்தி சிறிலங்கா இராணுவம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போராளிகளை மீண்டும் தலைஎடுக்க முடியாவண்ணம் அரசியல் முறையிலும் இராணுவ முறையிலும் அழித்துவிட மனப்பால் குடிக்கும். எதிரி யுத்தத்தின் முழுமையான நிலைமையை சரியான முறையில் கணக்கில் கொண்டுள்ளான். ஆகவேதான் அவன் ஏனைய பிரதேசங்களை முதலில் மீட்டு இறுதியில் யாழ்பாணத்தில் தனது கைகளை வைத்துள்ளான். இதற்கான அவசரத்தில் இந்தியாவுடன் இதுவரை பேணிவந்த நல்லுறவைக்கூட முறிக்கும் அவசரத் தன்மையை காட்டியுள்ளான். யாழ்பாணத்தில் எந்தவித அழிவுகளை ஏற்படுத்தவும் அவன் தயாராகவும் உள்ளான்.

10) யாழ்பாணம் இந்த நிலையை அடைந்ததற்கான காரணங்கள்.

அ) அதன் ஜனத்தொகை-ஏனைய மாவட்டங்கள் அனைத்தையும் விட அதிகமானது,

ஆ) பூகற்ப அமைவு இலங்கை தீவில் இருந்து துண்டாடப் பட்ட தனி பிரதேசமாய் இருப்பது. கொழும்பில் இருந்து கடல் மார்க்கமும் சற்று கடினமானவை, இந்தியாவுக்கு அண்மையில் இருப்பது.

இ) தமிழ் ஈழ உயர் வர்க்கங்களினால் எண்ணிக்கையில்பெரும் பான்மையினதும், அரசியல், பொருளாதார சக்தியில் முன்னணிவகுப்போரினதும் பிரதேசமாய் இருத்தல்.

ஈ) தமிழ் ஈழ மத்தியதர வகுப்பினரில் பெரும்பான்மையினர், குறிப்பாக புத்திஜீவிகளின் பெரும்பான்மையினரின் பிரதேசமாக இருத்தல்.

உ) முன்கூறிய இரு அணியினருக்கும் சர்வதேசிய ரீதியாகவுள்ள நெருக்கமான அரசியல், பொருளாதார தொடர்புகள்.

ஊ) யாழ் மத்திய தர வர்க்கத்தினரும், உயர் வர்க்கத்தினரும் ஐரோப்பிய நாடெங்கிலும் பரவிவரும் யாழ்பாணத்தை பிறப்பிடமாகக் கொண்ட (Professional Class) வர்க்கமுமே (பொறியியல் நிபுணர்கள், வைத்திய நிபுணர்கள் சட்டவல்லுனர்கள், நீதிபதி போன்ற மற்றும் பலரைககொண்ட) கொரில்லா யுத்தத்தின் முனைப்பாக திகழும் எல்.டி.டி.ஈ.-யின் வர்க்க அடித்தளமாக இருத்தல்.

உடனடி ராணுவ காரணம்மட்டுமல்ல. நீடித்து நின்று செயற்படக் கூடிய அரசியல் இராணுவ காரணிகளே யாழ்பாணத்தின் இம் முக்கியத்துவ நிலைக்கான மூலமாகும். ஆகவே ~~தமிழ் ஈழ~~

www.tamilarangam.net



விடுதலைப் போராட்டத்தில் யாழ்பாணத்தின் முக்கியத்துவம் ஒப்பு நோக்கில் நிரந்தரத்தன்மை கொண்டது.

11 சிறிலங்கா ராணுவம் இந்த இரண்டாவது கட்டத்தில் மிக திறம்பட நடந்துள்ளது. தமிழ் ஈழப் போராளிகள் செய்ய வேண்டியது என்ன? அவர்கள் செய்ததுள்ளது என்ன?

85, 86 ஆகிய இருவருடங்களும் எதிரியை பின்வாங்கவைப்பதற்கான தயாரிப்பு கட்டங்களாக பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும். தயாரிப்பு என்பது அரசியல், ராணுவ, பொருளாதாரம் தயாரிப்புகளையே குறிக்கும். ராணுவத் துறையிலும் அரசியல் துறையிலும் என்ன நடந்தது என்பதை தனித்தனியாக எடுத்துக் கொள்வோம்.

11. அ) **ராணுவத் துறையில் :-**

★ எதிரியின் களப்பகுதிகளான கிழக்கு மாகாணத்தின் பரந்த பகுதிகளிலும், வடமாகாண கரையோரங்களிலும் கொரில்லாயுத்தம் விஸ்தரிக்கப்படவில்லை. சிறிலங்கா ராணுவத்தின் நடமாட்டம் சுதந்திரமானதாகவே இருந்தன. சிறுசிறு காவல் நிலைகளைப் போன்ற ராணுவ முகாம்கள் பரவின. ராணுவ ஒற்றர்களாக இருந்த தமிழர்களும், சிங்களவர்களும் கூட சுதந்திரமாக நடமாடினார்கள். இது முதலாவது வகைப்பிரதேசமாகும். எதிரியின் தளப் பகுதிக்குள்ளான ராணுவ நடவடிக்கை முற்றாக புறக்கணிக்கப்பட்ட மாதிரியே இருந்தது. எதிரி தன்னைச் சுதாரித்துக் கொள்ளவும் அவசியம் இடப்பட்ட கால அவகாசமும், பிரதேச அவகாசமுமாக இது அமைந்தது.

★ மூன்றாவது வகைபபிராந்தியத்தியத்தில், அதாவது இருதரப்பும் போட்டியிடும் கொரில்லா பிராந்தியத்தில் தந்திரோபாய வகைப்பட்ட தற்காப்பு கொரில்லா போர் நடவடிக்கைகள் தான் இருந்ததே தவிர தாக்குதல் வகைப்பட்ட போர் நடவடிக்கையாக அவை இருக்கவில்லை. அந்தக்கட்டத்திற்கு வளரவில்லை. இதனால் எதிரி இப்பிரதேசத்துள்ள தந்திரோபாயவயப்பட்ட தாக்குதல் நடவடிக்கைகளில் முன்னேறினான். புதிய புதிய முகாம்களை பரவலாக அமைத்துச் சென்றதும் தேடி அழிக்கும் நடவடிக்கைக்கான படை நடமாட்டத்தை இப்பகுதியில் அதிகரித்ததும் தாக்குதல் நடவடிக்கையின் குணாம்சங்களாகும். கொரில்லா நடவடிக்கையால் மாத்திரம் இப்பிரதேசத்தில் போட்டியிட்டிருக்க முடியாது. நடமாட்ட யுத்தத்தை பிரயோசிக்க கூடிய வாய்ப்புகள் இருந்தன. ஆனால் "முன்னணிபடை" முறையின் வரம்புகள் இதை சாத்தியமானதாக்க அனுமதிக்கவில்லை. அத்துடன் இவ்விரு பிரதேசங்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ளிலும் சிங்களமக்களையிட்டும், முஸ்லீம் மக்களையிட்டும் போராளி களின் தவறான கண்ணோட்டத்தில் இருந்த தவறுகளில் தீய விளைவுகளை எதிரி தனக்கு சாதகமாகபயன்படுத்திக்கொண்டான். அரசியல் ரீதியில் மட்டுமல்ல ராணுவ ரீதியிலும் பயன்படுத்திக் திக் கொண்டான்.

★ 2-வது பிரதேசத்தை அதாவது கொரில்லா யுத்தத்திலான தளப்பகுதியை எடுத்துக்கொள்வோம். இங்கு எதிரி ஒவவொரு பகுதி, பகுதியாக தாக்குதலை மேற்கொண்டான். ஒரு பகுதியில் தந்திரோபாய ரீதியான தாக்குதலை மேற்கொள்ளும்போது மற்றப் பகுதியில் தந்திரோபாய ரீதியான தற்பாதுகாப்பு நிலையில் இருந் தான். அவன் தற்பாதுகாப்பு நிலையில் இருந்த பகுதியில் போரா ளிகள் எதுவித தாக்குதலையும் நடத்தவில்லை. இதனால் இப்பகுதி அமைதியான பிரதேசமாக இருந்தது. அவன் தாக்குதலில் ஈடுபட்ட பகுதிகளில் போராளிகள் அவனின் தாக்குதலை எதிர் கொள்ளவும் இல்லை. இது மூடியாத காரியம் தான். எதிர் கொள்ளாமல் பின் வாங்கியது அல்லது எதிர் கொள்ளலைத் தவிர்த்தது சரியா தவறா என்பதையிட்டு நாம் எதுவும் கூறமுடியாது. போராளிகளின் ஒட்டு மொத்த பலம் என்பதைப் பொறுத்தே தீர்மானிக்கப்படவேண்டும். அனைத்துப் போராளிக் குழுக்களில் ஒட்டு மொத்தப்பலமும், ஒவ் வொரு போராளி குழுக்களின் ஒட்டு மொத்த ராணுவச் செயற் திற னையும் பொறுத்தவிடயமாகும். போராளிக்குழுக்களிடையே கட்டு ராணுவ நடவடிக்கைகான அமைப்பு ஒழுங்குகள் எதுவும் இல்லாத தால் அனைவரினதும் ஒட்டு மொத்த பலன் என்ன என்பதை அறி யும் திறன் போராளிகளின் பக்கத்தில் எளருக்குமே இருந்ததில்லை. எதிரியை எதிர்கொள்ள முடியாமைக்கு இது ஒரு பிரதான ராணுவ காரணமாகும். இப்பிரதேச மக்கள் ஸ்தாபன ரீதியாக ராணுவ தற்பாதுகாப்பு செயற்பாட்டிற்காக அல்லது போர் நடவடிக்கைக் காக அணிதிரட்டப்படாதது மற்றோர் ராணுவ காரணியாகும்.

எதிரி தாக்குதலில் ஈடுபட்ட பிரதேசத்தைவிட்டு பின்வாங்கியது அல்லது எதிரியுடன் போர்நடவடிக்கைகளை தவிர்த்துக் கொண்டது மாத்திரமல்ல, யாழ்பாணம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களிலும் ஏன் அமைதிபேணப்பட்டது? எதிரி இப்பிரதேசங்களில் போர் நட வடிக்கை எதுவும் அற்ற தற்பாதுகாப்பு பேணுவது என்ற கொள்கை யையே கடைப்பிடித்தான். போராளிகள் அவனின் தந்திரோ பாயத்தை உடைத்திருக்கவேண்டும். போர் நடவடிக்கையில் அவனை ஈடுபடுத்தியிருக்க வேண்டும். மன்னாரில் நடந்தது போல் அவன் ஏனைய பிரதேசங்களிலும் நடபபான் என்பதை உணர்ந்து அவனின் நடமாட்டத்தை எதிர் கொள்ளதயராய் இருந்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திருக்கவேண்டும். இதில் எதுவுமே நடக்கவில்லை. கிழக்கு மாகாணத்தில் எதிரியை அமைதி கொள்ளவிடாமல் தொடர்ச்சியான கொரில்லா வடிவு கொண்ட போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்த போராளிகள் வடக்கு மாகாண வன்னிப்பிரதேசத்தில் மாத்திரம் அமைதியடைந்தது ஏன்? யாழ்ப்பாணத்தை மாத்திரம் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தால் போதும் என்ற முடிவுக்கு வந்தது ஏன்? போராளிகளின் இத்தவறான தந்திரோபாயம் எதிரிக்கு வாய்ப்பாக அலைந்தது. அவன் யாழ்பாணத்தின் மீதான பெருந்தாக்குதலுக்கு அவசியமான ராணுவ, அரசியல் தயாரிப்பை செய்வதற்கு சாத்தியமாக்கியது. யாழ்பாணத்தை அரசியல் ரீதியிலும், ராணுவ ரீதியிலும் தமிழ் ஈழ ஏனைய பிரதேசங்களில் இருந்து தனிமைப்படுத்தினான்.

யாழ்பாணத்தில் போராளிகள் கைக்கொண்ட தந்திரோபாயமும் தவறானதேயாகும். யாழ்பாணத்தை தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது அவசியம் என வந்த முடிவு சரியானது. ஆனால் அதற்காக கையாண்ட நடவடிக்கைகள் தவறானவை. எதிரியின் யாழ்பாண ராணுவ குவிப்பை சாத்தியமற்றதாக்க அல்லது கடினமானதாக்க வன்னியின் ஏனைய பிரதேசங்களிலும் போர் நடவடிக்கைகள் உக்கிரமாக மேற்கொண்டிருக்கவேண்டும். இவை தோல்வி காணும் போர்நடவடிக்கைகளாக இருந்தாலும்கூட எதிரியின் கணிசமான தொகையினரை வன்னிப்பிரதேசத்துள் செயற்பட வைக்க கூடியதாய் இருத்தால் இது மூலோபாயரீதியான வெற்றியாகவே இருந்திருக்கும். இதை விடுத்து எதிரியை யாழ்பாணத்துள் வெல்வது என்பது யாழ்பாணத்துள் நடைபெறும் போர் நடவடிக்கைகளினாலே தீர்மானிக்கப்படும் என்ற முடிவெடுத்தது மிகப்பாரதூரமான ராணுவத்தவறாகும்.

யாழ்பாண முகாம்களில் இருக்கும் ராணுவத்தை யாழ்பாணத்துள் வெளிவர விடுவதில்லை என்பதுவே போராளிகளின் போர் தந்திரோபாயமாக இருந்தது. இதைச் சாதிப்பதில் கொரில்லா யுத்தத்தின் அபார சக்தியை போராளிகள் மிக திறமையாகவும், நேர்த்தியாகவும் வெளிப்படுத்தினார்கள். இது தந்திரோபாய ரீதியான ஒரு தற்பாதுகாப்பு நடவடிக்கையேயாகும். எதிரி தனது பெருமளவு, பலத்தைப் பிரயோகித்து சுற்றிவளைத்தலையும். அழித்தொழிப்பையும் மேற்கொள்ளும்போது அவனை எதிர் கொள்வதற்கான ராணுவ அரசியல் தயாரிப்புகளைச் செல்வதற்கான கால அவகாசத்தையும், பிரதேச பாதுகாப்பையும் உத்தரவாதப் படுத்துவதற்கான தந்திரோபாய ரீதியான தற்காப்பு நடவடிக்கைகளேயாகும். போராளிகள் இவ்வெற்றியை மூலோபாய ரீதியான த க்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குதலுக்கு கிடைத்த வெற்றியாக எண்ணிப் பெருமைப்பட்டார்கள். இவ்வெற்றிகளுடன் திருப்திப்பட்டு யாழ்பாணம் தமது கைகளில் வந்துவிட்டதாக எண்ணி தமக்குள் ஆயுதத்தால் மோதிக் கொள்ள ஆரம்பித்தார்கள். எதிரியின் பெருமளவு தாக்குதலுக்கு முகங் கொடுக்கும் காலம் கிட்டிவருகிறது என்பதை உணரவில்லை. கிரமமான யுத்தத்தினதும், மக்கள் தற்பாதுகாப்பு படைகளினதும் அவசியம் நெருங்கி வருவதை உணரவில்லை. அதற்கான தயாரிப்புகள் எதுவும் செய்யவில்லை. மூலோபாயரீதியான தயாரிப்புக் காலகட்டமென்பது தந்திரோபாய ரீதியான தாக்குதலையும் உள்ளடக்கியது. இத்தாக்குதல் எதிரியின் சுற்றிவழைத்தல், அழித்தொழித்தல் போர் நடவடிக்கையை சீர்குலைக்க கூடியதாய் அமையவேண்டும். ஆனால் எவ்வித தாக்குதல் நடவடிக்கையும்இருக்கவில்லை.

இவையே போராளிகள் 85, 86 ஆகிய இரு வருடங்களிலும் இழைத்த ராணுவத் தவறுகளாகும்.

11. ஆ) அரசியல் துறையில் இழைத்த தவறுகளை அவதானிப்போம். ராணுவத்துறையிலான தவறுகளைவிட அரசியல் துறைகளிலான தவறுகளே தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் தீர்க்கமானவையாகியுள்ளன. அரசியல் தவறுகளில் வெளிப்பாடே ராணுவத்துறைகளிலான தவறுகளேயாகும். நாம் ஏற்கனவே கூறியபடி ''முன்னனிபடை யுத்தமுறை'' ஒரு அரசியல் தவறேயாகும். கிரமமான யுத்தத்தை நோக்கி நகராமை என்ற ராணுவத் தவறு இங்கு அரசியல் தவறின் வெளிப்பாடேயன்றி தனித்த ஒரு ராணுவத் தவறல்ல. ''முன்னனிபடை யுத்தமுறை'' என்ற அரசியல் தன்னுடன் சேர்ந்து செய்ற்பட்ட ஏனைய தவறுகளை அவதானிப்போம்.

அ) போராளிகளையும் மக்களையும் ஐக்கியப்படுவதை தடுத்தமை. தனி நபர் போட்டிகளுக்கும் கோஷ்டி சண்டைகளுக்கும், கோஷ்டிகளின் ஆதிக்கத்திற்கும் முயற்சிகள் மேல் கொள்ளப்பட்டதே தவிர, பொதுவான வேலைத்திட்டம் ஒன்றை முன்வவத்து அதன் அடிப்படையில் ஐக்கியத்தை ஏற்படுத்த முயற்சிக்கவில்லை. டெலோவிற்கு எதிரான தாக்குதலுக்கு அவர்கள் ஒரு அந்நிய அரசின் கைக்கூலிகள் என காரணங் காட்டப்பட்டது. தமிழ் ஈழ போரானகளின் தவறான யுத்த முறையின் காரணத்தால் ஆயுதத்திற்கும், நிதிக்கும் அந்நிய சக்திகளில் சார்ந்திருக்க வேண்டியிருப்பது கண்கூடு. இந்நிலமையை பயன்படுத்தி ஆதிக்க நோக்கமுள்ள அந்நிய சக்திகள் தமது ஏஜண்டுகளை போராளிக் குழுக்களினுள் தோற்றுவிக்கும் என்பதுவும் மறுப்பதற்கில்லை. சில வேளைகளில் தலைமையையே தமது கைகளுள் போட்டிவிடும் என்பதுவும் நடந்த, நடைபெறுகின்ற நிகழ்ச்சியாய் விட்து. இவ்விதமான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்களேதான். இவ்விதமான வர்களின் ஏஜெண்டுத்தனக் ராணுவ ரீதியான செயற்பாட்டுடன் கூடியதாய் இருந்தால் தண்டனையும் இவ்விதமாகவே அமைய வேண்டும். ஆனால் காலகட்டமும் அதைச் செயற்படுத்தும் முறை போராளிகளுக்கிடையேயான ஐக்கியத்தை உருவாக்கக்கூடிய தாயும், போராளிகளுக்கும் மக்களுக்கும் இடையே நேச உறவை பேணக்கூடியதாயும், இராஜதந்திரம் மிக்கதாயும் அமையவேண்டும் டெலோ ஒரு விடுதலை இயக்கம். அது ஒரு கூலிபபடையல்ல. இதன் தலைமையில் சில அந்நிய ஏஜெண்டுகள் இருந்திருக்கலாம். இனியும் இருக்கலாம். ஆனால் இதற்காக டெலோ முழுமையும் அழிக்கப்படக்கூடாது. அதனுள் களை எடுப்புகள் மேற்கொள்ளப் படவேண்டும். அரசியல் ரீதியில் அதன் ஏஜெண்டுத்தனம் அம்ப லப்படவேண்டும். இந்நடவடிக்கைகள் போதாது எனக்கண்டால் அதற்தெதிரான ராணுவ நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். ஆனால் அது ஜனநாயக ஒழுங்கு முறைகளுக்கு உட்பட்டதாக அமையவேண்டும். அத்துடன் எக்காரணத்தைக் கொண்டும் எதிரியை 3—வது கட்டத்துள் தள்ளிச் செல்லும் வரை இவ்வித நட வடிக்கைகள் தவிர்க்கப்படவேண்டும். 3 வது கட்டமென்பது எதிரி பின்வாங்குவதும் நாம் மூலோபாய ரீதியாக எதிர்த்து தாக்குவது மாகும். இக்கட்டத்தின் இறுதிலேயே இவ்விதமான விடயங்கள் கணக்குத் தீர்த்துக் கொள்ளப்படவேண்டும், ஏற்கனவே கூறியது போல் 2-வது கட்டத்தின் துவக்கப்பருவத்தை 1 -வது கட்டத்தின் முடிவுப்பருவமாக கருதியது இத்தவறுக்கான காரணமாகும். அக் கட்டத்தில் கூட இவ்விதமான நடவடிக்கை எடுப்பது தவறேயாகும்

ஆ) இவ்விரு வருடங்களிலும் தம்மை அரசியல் ஆட்சியாளரா திருபித்துக் கொள்வதற்கு பதிலாக ராணுவ அதிகாரத்துவ வாதி களாக காட்டிக்கொண்டார்கள். எதிரியின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கொரில்லா பிரதேசங்களில், கொரில்லா படைபிரிவின் செயற்பாட்டில்—ஜனநாயக வாழ்வுமுறை இருக்காது என்பது புரிந்து கொள்ளக்கூடியது. ஆனால் தமது சொந்தக்கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்தில் ஜனநாயக வாழ்வுக்கு திரும்பவேண்டும். தாம் திரும்புவது மாத்திரமல்ல மக்களையும் அந்நிலைமைக்குள்ளாக்க வேண்டும். இரண்டுமே நடக்கவில்லை.

இ) அரசியல் அதிகாரத்துக்காகவும், பொருளாதார மறு நிர் மானத்துக்காகவும், ராணுவ தற்பாதுகாப்புக்காகவும் வெகு ஜன அமைப்பு மயப்படுத்தல், இல்லாதிருந்தது. எதிர் தாக்குதலுக்கான தயாரிப்புக்கு இது ஜீவாதாரமானது.

ஈ) சர்வதேச ஆதரவை பெறுவதில் தவறுகள். இது இரு வகையானதாக அமைந்துள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1) மனிதாபிமான அடிப்படையில் வளர்ந்த, வளர்க்கப்பட்ட ஆதரவுதான் அதிகமே தவிர சர்வதேச முரண்பாடுகளை கையாள்வதில் ராஜதந்திரரீதியாக நடந்து கொண்டமை மிக பலவீனமானதே. போராளிகளில் ஒரு அணியினர் சர்வதேச முரண்பாடுகளை கையாளப் புறப்பட்டு இம் முரண்பாடுகளால் கையாளப்பட்டு இன்று தமது தனித்துவத்தை இழந்து காணப்படுகிறார்கள்.

2) அந்நிய நாடுகளில் வாழ துரத்தப்பட்டுள்ள மக்கள் மத்தியில் எதுவித அரசியல் அணிதிரட்டலும் நடைபெறவில்லை. இவர்களின் செயற்பாட்டினாலும், இயக்கங்களின் தவறான செயற்பாட்டினாலும் போராளிகள் அந்நிய நாடுகளில் குறிப்பாக தமிழ் நாட்டில் தமது பழைய மதிப்பை இழந்து காணப்படல்.

ஈ) தமிழ் ஈழத்தின் ஒரு பிரதேசம் எதிரியின் தாக்குதலுக்கு உள்ளாகும் போது ஏனைய பிரதேச மக்கள் தமக்கு எதுவும நடைபெறாதது போல் அமைதியாக இருத்தல். ஒரு பிரதேசத்தில் ஏற்பட்ட பாதிப்புக்களை கண்டித்தும், அப்பிரதேசர மக்களுடன் தமது ஒருமுகப்பாட்டைக் காட்டியும் ஏனைய பிரதேசங்களில் எதுவித அரசியல் இயக்கமும் நடைபெறாதிருந்தமை.

உ) சிங்கள மக்களுடன் ஒருமுகப்பாட்டை ஏற்படுத்தும் முயற்சியில் தீர்க்கமான வெற்றிகள் காணப்படாமை. சில போராளிக் குழுக்களின் நடவடிக்கையே இவ ஒருமுகப்பாட்டிற்கு தடைகளாக இருந்துள்ளன.

12) 85–ம், 86-ம் ஆண்டுகளில் போராளிகளின் நடவடிக்கைகளின் விளைவுகள் என்ன? 87-ம் ஆண்டுடன் தமிழ்ஈழ விடுதலைப் போராட்டம் மீண்டும் 1-வது கட்டத்திற்கு பின்வாங்கியது. எதிரி மூலோபாய ரீதியாக முன்னேறி மூலோபாய ரீதியான தமது தாக்குதல் நிலையை ஸ்திரப்படுத்திக் கொண்டான். போராளிகள் மூலோபாய ரீதியாக பின்வாங்கி மூலோபாய ரீதியான தமது தற்பாதுகாப்பு நிலைக்கு மீண்டும் வந்துசேர்ந்துவிட்டார்கள். நீண்டு செல்ல வேண்டிய இரண்டாவது கால கட்டம் குறுகிய காலத்துள் 2 வருடங்கள் எதிரிக்கு சாதகமாய் முடிவடைந்துவிட்டது.

எதிரியின் இராணுவ செயல்வீச்சை எல்லைப்படுத்தும் காரணிகள் அவனை போராளிகள் மேல் இறுதி வெற்றியை ஈட்டச் செய்யாது. போராளிகளின் மூலோபாய ரீதியான தற்பாதுகாப்பு வட்டத்துள்ளாக அமைந்த தாக்குதல் போர் நடவடிக்கைகளை அவன் தொடர்ந்தும் முகங்கொடுப்பான். அதை நிறைவேற்றுவதற்காக போராளிகளிடம இருக்கும் சக்திகளை அவனால் இல்லாமற்செய்ய முடியாது. அதேபோல் போராளிகளால் எதிரியை பின்வாங்கும் கட்டத்தை நோக்கித் தள்ளமுடியாது. மூலோபாயமான தற்பாதுகாப்பு நிலையில் இருந்து சில காலத்துக்குள் தம்மை விடுவித்துக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்டு எதிர்தாக்குதலுக்கான தயாரிப்பு நிலைக்குள் போராளி கள் நுழைந்தாலும் மிகவிரைவில் மீண்டும் பின்வாங்கிவிடுவார்கள். அவர்களின் சொந்தப்பலவீனங்களே அவர்களின் யுத்த ஆற்றலுக் கான எல்லைப்படுத்தும் காரணியாக உள்ளன. இவ்விதம் முடிவும் இன்றி விடிவும் இன்றி, 1-வது கட்டத்தில் இருந்து 2-வது கட்டத் திற்கு மீண்டும் 2-வது கட்டத்தில் இருந்து 1-வது கட்டத்திற்கு என்று முன்னும் பின்னும் (See-saw) பலகையைப்போல் ''சுற்றி யும் சுற்றியும்சுப்பர்ரை கொல்லையை வட்டமிடும்'' யுத்தமே ராணுவ தேக்கநிலை எனப்படும்.

தற்பொழுது தமிழ் ஈழ பிரதேசத்தில் ஆயுதப்போராட்டமே பிரதான போராட்ட வடிவமாய் இருப்பதனால், ராணுவ தேக்கம், அரசியல் தேக்கத்திற்கும் காரணமாக அமையும். அத்துடன் அரசி யல் ரீதியிலான தவறுகள் திருத்தப்படும்வரை சுறுசுறுப்பான அரசி யல் செயற்பாடும் இராது, ராணுவ தேக்கநிலையும் மாற்ற முறாது. அடுத்த பக்கத்தில் எவ்விதமானாலும் ராணுவத்தேக்க நிலையை உடைத்தெறிவதன் மூலமே அரசியல் தேக்கநிலையும் உடைவுபெறும்.

இத்தேக்க நிலை உடைவது எங்ஙனம் இதை உடைக்கக் கூடிய சக்தி எது?

3) தமிழ் ஈழ விடுதலைப் போராளிகளால் இது உடைக்கப் பட்டு, சிறிலங்கா ராணுவத்தின் மீது ஒரு இறுதியான வெற்றியை நிலை நாட்டும்போதே இலங்கையின் தேசிய இனச்சிக்கலுக்கும், தமிழ் ஈழத்தின் சமூக அமைப்புடன் தொடர்புபட்ட பிரச்சனைகளுக் கும், ஒரு சோஷலிஸ தீர்வு கிடைக்கும். வேறு புறநிறை சக்தி களால் இப்புற நிலை உடைக்கப்படுமானால் ஒரு நிவாரணம் கிடைக்குமே தவிர குணமடைதல் கிடைக்காது.

மக்கள் யுத்த முறையை நடைமுறைப் படுத்தக்கூடிய ஒருபுரட்சி கர ஸ்தாபனத்தின் தோற்றமும், அதன் முன்னணிப் பாத்திரமுமே இதற்கான நிவாரணமாகும். ஆனால் தமிழ் ஈழத்தின் அரசியல், ராணுவ நிலமை இவ்விதமானதொரு ஸ்தாபனத்தை உடனடியாக தோற்றுவிக்கும் நிலையை வெளிப்படுத்துவதாக தெரியவில்லை. இவ்விதமானதொரு ஸ்தாபனத்தின் முன்னணி பங்களிப்பை நடை முறை ரீதியாக காண்பதற்கு பல காலம் எடுக்கும். இது இலங்கை யின் மா-லெனினிஸ்டுகளால் செய்யப்பட வேண்டிய ஒரு கடமை யாகும். ஆனால் ''ஐயர் வரும்வரை அமாவாசை காத்திருக்க மாட்டாது'' மக்கள் யுத்தப்பாதை பிரதான நடைமுறையாக மாறும் வரை எதிரியினதும், போராட்டங்களினதும், ''கைகள் புளியங்காய் பிடுங்க சென்றுவிடாது''. மக்கள் யுத்தத்தை தவிர வேறு குறுக்கு வழி எதுவும் இல்லை என்பதை விஞ்ஞானப்பூர்வமாக புரிந்து கொண்டு அதை நடைமுறை நிகழ்ச்சி நிரலாக மாற்றுவதற்காக உழைக்கும் அதே வேளையில் தற்போது நடைமுறையில் உள்ள யுத்த முறையிலும் தமது பங்களிப்பை செலுத்தவேண்டும். அதன் நிறைவு அம்சங்களை வளர்க்கவும் பேணிபாதுகாக்கவும் முயற்சிக்க வேண்டும். இவ் நிறைவு அம்சங்களே தமிழ்ஈழ மக்கள் முன்னோடி களாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



14) தமிழ் ஈழ போராளிக்குழுக்கள் ''வேதாளம் முருங்க மரத்தில் ஏறிய கதைபோல்'' தமது யுத்த முறையின் தோல்வியின் அனுபவத்தின் பின்பும் அதே யுத்த முறையையே பின்பற்றுவதில் ''விடாக்கண்டன் கொடாக் கண்டன்''களாகவே இருப்பார்கள். ஏனெனில் இது ஒரு வர்க்க சித்தாந்தம் சம்பந்தப்பட்டபிரச்சனையாகும். சில தோல்விகண்ட யுத்த அனுபவங்கள் மாத்திரம் அவர்களின் சித்தாந்தத்தில் மாற்றத்தை ஏற்படுத்திவிட மாட்டாது. ஆகவே இதை இவர்களிடம் எதிர்பார்க்கவும் கூடாது. ஆனால் ''முன்னணிப்படை யுத்த முறையில்'' உள்ள பலநிறை அம்சங்களை இவர்களால் வளர்த்துக் கொள்ள முடியும். அதேபோல் மக்கள் யுத்தத்தில் சில அம்சங்களை இவர்கள் கிரகித்துக் கொள்வார்கள். இந்நிகழ்ச்சிப் போக்கால் இவர்களின் யுத்ததிறன் அதிகரிப்பதுடன் பல மக்கள் யுத்த கோட்பாட்டாளர்களை இவர்கள் மத்தியில் இருந்தும் தோற்றுவிக்கும், அல்லது தொடர்ந்தும் மேலும் தோற்றுவிக்கும் என்று கூறலாம்.

15) தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தின் தற்போதைய அவல நிலைக்கும்,தோல்விநிலைக்குமான காரணம் எல்.டி.டி.ஈ. தான் என்னும் கருத்துபலபோராளிக்குழுக்கள் மத்தியிலும் இந்திய இலங்கை. முற்போக்கு சக்திகள் மத்தியிலும் நிலவுகிறது. இது தவறானதும் ஒருமுனைத் தன்மை கொண்டதுமாகும். தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தின் சரியான அம்சங்களிலும், பிழையான அம்சங்களிலும் அதற்கு ஒரு தீர்க்கமான பங்கு உண்டு. ஏனைய விடுதலை குழுக்களும் இதைப் போன்றதே. சிங்கள பெருந்தேசியவாத அடக்கு முறைக்கு எதிராக அனைத்துக் குழுக்களையும் உள்ளடக்கிய சுதேசிய முன்னணியொன்று மிகவும் அவசியம். இது ஒரு கட்டாய நிபந்தனையாக்கப்படவேண்டும். இதற்கான பரந்த வெகுஜன அழுத்தம் ஒன்று உருவாக்கப்படுவது அவசியம். எல்.டி.டி.ஈ.யால பாதிக்கப்பட்ட போராளிக்குழுக்கள் இது விடயத்தில் முன்னணி வகிக்கவேண்டும். எல்.டி.டி.ஈ.கku எதிரான அழிவுபூர்வமான விமர்சனங்களை கைவிடவேண்டும். எல்.டி.டி ஈ. எதிர்ப்பு முன்னணிகளையும் உருவாக்கும் முயற்சிகள்தவறானவை. சிங்கள பேரினவாத தாக்குதல்கள் இருக்கும்வரை எந்தவொருஇயக்கத்தையும் யாராலும் அழித்துவிட முடியாது. எல்.டி.டி,ஈ.யால் அழிக்க முயற்சிக்கப்பட்ட, டி.இ.எல்.ஏ. இன்னமும் முற்றாகஅழிக்கபபடவில்லை என்பதை கவனிப்பது சிறந்தது. எல்.டி.டி.ஈ.யை நோக்கிய ஆக்கபூர்வமான விமர்சனங்கள் முன்வைக்கப்படவேண்டும். டி.இ.எல்.ஓ வை எல்.டி.டி.ஈ. கண்டித்த முறை தவறு என்று கண்டிக்கும் இயககங்கள் தாமும் அதே முறையை மாறுபட்ட வழிகளில் எல்.டி.டி.ஈ.க்கு எதிராக பின்பற்ற முற்படுவார்களானால் அது தவறானது. இவை பிரச்சனையை மேலும் சிக்கலாக்குமே தவிர தீர்க்காது. வடமாகாணத்தில் தமிழ் அரசுக்கட்சியே தனது பிரதான அரசியல் எதிரி என்று இடதுசாரிக் கட்சிகள் கணிப்பிட்டன. இக் கணிப்பிடு சரியானதே. இதற்காக சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் கூட்டிணைந்தது. அதன் சிங்கள பேரினவாத தன்மையை மூடிமறைதததது. அவர்களின் கதி என்னவானது? தமிழரசுக்கட்சிக்கு இரட்டைத்தன்மை உண்டு என்பதை உணர

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தவறிவிட்டார்கள். சிங்களபேரின வாதத்திற்கெதிரான அதனது பக்கத்துடன் இணைவையும் சமூக அமைப்பு சம்பந்தமான அதனது பக்கத்துடன் எதிர்ப்பையும் காட்டியிருக்கவேண்டும். எல்.டி.டி ஈ.க்கு இருபக்கம் உண்டு. அந்நிய சக்திகளில் சார்ந்திருப்பதுவும் தவிர்க்கப்பட வேண்டும். சிறிலங்கா அரசுடன் நல்லுறவை வளர்க்க வேண்டிய அவசியமுள்ள அந்நிய சக்திகள் தமது தேவைக்காக இவர்களை பலியிடவும் கூடும். அப்போது 'அரசனை நம்பி புருஷனை கைவிட்ட நிலை'க்குள்ளாக கூடாது. இலங்கைத் தீவின் மக்களே அடிப்படையான சக்தி. தமிழ் நாட்டு மக்களே மிகக் கிட்டிய நேச சக்தியாகும். இவ்விருவரினதும் வெறுப்புக்குள்ளாகக் கூடிய அந்நிய சக்திகளுடன் கூடிக் குலாவுவது அவ்வளவு நல்லதல்ல.

இப்போராளிக்குழுக்களுக்கு எதிரான எல்.டி.டி.ஈ.யின் ராணுவ தாக்குதல் தவறானதே. எல்.டி.டி.ஈ. இன்னமும் இதை தொடர்கின்றது, கண்டிக்கப்பட வேண்டியதே, எல்.டி.டி.ஈ. இதற்கான தண்டனையை ஏற்கனவே அனுபவித்துவிட்டது. இது அரசியல் ரீதியானதும் ராணுவ ரீதியானதுமாகும. தற்போதும அனுபவித்துக்கொண்டிருக்கின்றது. இனியும் அனுபவிக்கும். வெகுஜன அபிப்ராயமும், எல்.டி டி.ஈயின எல்லைகளும், தொடாந்தும் இந்த நிலையில் எல்.டி.டி.ஈ,–யை வைத்திருக்கமாட்டாது. எல.டி.டி.ஈ. இத்தவறான பக்கத்தை நிவர்த்தி செய்வதற்கு உரிய ஒரே வழி சிறிலங்கா அரசுக்கு எதிரான போர் நடவடிக்கையை துரிதப்படுத்துவது தான். தற்பாதுகாப்பிற்காக எல்.டி.டி.ஈ. தாக்கினால் திருப்பித் தாக்குவது வேறு விசயம. இது எவனும் செய்யக்கூடியது. ஆனால் அதை அழிக்கும் நோக்கமுடையதாக இருக்கக்கூடாது.

அதே போல்தான் எல்.டி.டி.ஈ.யும் தனது இப்போக்கை நிறுத்திக் கொள்ள வேண்டும. ஏனைய போராளிகுழுக்களுடன் நட்புறவை வளர்த்துக்கொள்ளவேண்டும்.

இதைவிடுத்து தமிழ் ஈழ போராளிகள் இரு வகைமுகாம்களாக பிரிக்கப்படுமானால், தெங்காசிய சூழலில் இப்பிரிவை அந்நிய சக்திகள் தமக்கு சாதகமாக பயன்படுத்தலே முடிவாய இருக்கும். இத் தேக்கநிலையை உடைக்கும் ராணுவ பலத்தை எக்காரணங் கொண்டும அவர்கள் பெற்றுக்கொள்ளமாட்டார்கள். பல்வேறு விதமான அர்த்தங்களுக்கு இடமுண்டாகிவிடும்.

## தமிழ் ஈழ போராளிகளால் இத் தேக்க நிலையை உடைக்க முடியாது போனால் மாற்று யார்? அல்லது எது?

16) சிறிலங்கா அரசால் போராளிகளை முற்றாக அழிக்க முடியாது. போராளிகள் மேல் ஒரு தற்காலிக வெற்றியை ஈட்டு

www.tamilarangam.net



வதன் மூலம் தேக்கநிலையில் ஒரு தற்காலிக உடைவை சிலவேளை உருவாக்க முடியும். சிறிலங்கா அரசின் பலத்திற்கான எல்லைப் படுத்தல்களை ஏற்கனவே அவதானித்தோம்.

17) சிறிலங்கா அரசின் சகாவும், தலைவனுமான அமெரிக்க அரசும் இதைவிரும்பமாட்டாது. யுத்தத்தை ஒரு தேக்கநிலைக் கட்டத்தில வைத்திருந்தால் தான் தீவு முடிவதையும் ராணுவ மயப்படுத்தலில் துரித முன்னேற்கான முடியும்.

**அடுத்த மாற்று யார்?**

18) ஜனநாயக உரிமைகளைக் கோரியும், யுத்தநிறுத்தத்தை மேற்கொள்ளக்கூறியும் தென் இலங்கை மக்களின் பல்வேறு பகுதினராலும் நடத்தப்படும் இயக்கங்களா? ஆம் இதற்கான வாய்ப்புகள் உண்டு. ஆனாலும் இது நீண்டு செயறபடும் காரணியாகவே இருக்கும். உடனடியானதும் துரிதமானதுமான விளைவைத் தராது. இவ்விதம் இருந்துங்கூட இது மிக புரட்சிகரமானதும் சக்தி வாய்ந்ததுமான காரணிகளாக இருக்கும். இநநிர்பந்தம் அரசை ஒரு அரசியல் தீர்வை காணும் நிலைக்கு அழுத்தும். இவ்விதம் நடைபெறுமானால் இத்தீர்வு மிக உறுதியானதாகவும், நீடித்த ஆயுள் கொண்டதாகவும் அமையும். தமிழ் ஈழ போராளிகளின் நடவடிக்கை சிங்கள மக்களின் இவ்வித முயற்சியை கூர்மைபடுத்துவதாக அமையவேண்டும். தென் இலங்கை மக்களுடன் ஒரு அரசியல் ஒருமைப்பாட்டைக் காட்டவேண்டும்.

19) ஆனால், இந்திய மத்திய அரசு செயற்படுதிறனும், நீதி வழுவா நடுநிலையாளனும் என்ற பாத்திரத்தை வசக்க தவறுமானால், சார்பு நாடுகளிடையே நேசஉறவை வளர்ப்பதில் முன்முயற்சியாளனாகவும் முன்னுதாரணமாகவும் திகழ மறுக்குமானால், பிராந்திய மேலாதிக்கத்தை வெளிப்படுத்துமானால் சிங்கள மக்கள் மத்தியில் இருந்து இவ்வித இயக்கங்கள் தோன்றுவது தடைப்பட்டுவிடும். மீண்டும் ஒரு அநாகரிக தர்மபால சகாப்தம் தோன்றுவதற்கான வாயப்புகளே ஏற்படும். இது இராணுவ தேக்கநிலையை மேலும் வலுவூட்டிவிடும்.

**வேறு மாற்றுகள் ?**

20) இந்திய அரசுமுன் சொன்ன முறையில் நடந்துகொள்ள வேண்டும். சிறிலங்கா அரசுக்கும் தமிழ் ஈழ போராளிகளுக்கும் இடையே ஓர் நல் இணக்கத்தை ஏற்படுத்த முயற்சிக்கவேண்டும். இரு பகுதியினருக்கும் பாதிப்பில்லா ஒரு தீர்வை எய்த உதவவேண்டும். அதை நடைமுறைலிடவும் சில குறிப்பிட்ட காலத்திற்கு அதை நிறைவு செய்வதற்கான உத்தரவாதத்தை வழங்கும் பங்கை ஆற்றவும் வேண்டும். இலங்கைத் தீவின் அரசியல், ராணுவ நிலமை

www.tamilarangam.net



களை கணக்கில் கொள்வோமானால் இதுவே உடனடி சாத்தியப் பாடுள்ள தீர்வாக அமையும். தமிழ் நாட்டு மக்கள் உட்பட அனைத்து இந்திய மக்களினதும் பொதுவான விருப்பம் இதுவேயா கும். உலக பொது அபிப்பிராயமும் இதுவேயாகும்.

இந்நிலமை உருவாகுமானால் இலங்கைத் தீவின் மேலான யுத்த மேகங்கள் அகலும். இலங்கைத்தீவு ராணுவ மயப்படுத்தப் படுவதற்கு ஒரு முற்றுப்புள்ளி இடப்படும். குறைந்தது ஒரு மூக் காற்தரிப்பாவது இடப்படும். நாட்டின் இனவாரியான பதட்ட நிலமை தணிந்து வேறோர் வகைப்பட்ட போராட்டங்கள் தோன்ற லாம்.

ஆகவே போராளிகளும், இலங்கையின் அனைத்து முற்போக்கு சக்திகளும், இந்திய முற்போக்கு சக்திகளும் பின்வரும் கோஷங் களை ஜனரஞ்சகமானதாக்க வேண்டும். இதை இலங்கைத்தீவின் மக்களினதும் இந்திய மக்களினதும் பொதுக் கோஷங்களாக்க வேண்டும். இந்திய மத்திய அரசிற்கு ஒரு வெகுஜன அழுத்தத்தை ஏற்படுத்த வேண்டும்.

"இந்திய மக்களும், இந்திய அரசுமே தெற்காசிய நாட்டு மக்க ளிடையேயும் அரசுகளிடையேயுமான ஐக்கியம் பேணப்படுவதி லான பிரதான பாதிப்பை பங்களிப்பை செலுத்தவேண்டும்!"

"இலங்கையின் சுயாதிபத்தியத்திற்கும், ஒன்றினைவிற்கும் பங்கமேற்படாத விதத்தில் தீய நோக்கு எதுவும் இன்றி, இலங் கையின் இனப்பிரச்சனையில் மத்தியத்துவ பங்கைவகிப்பது இந்தியாவின் உரிமையும் கடமையுமாகும்".

ஆனால் போராளிகளும், தென் இலங்கை முற்போக்கு சக்தி களும் இந்திய அரசை சார்ந்தோ, அதை மாத்திரம் நம்பியோ இருக்கக்கூடாது. அந்த அசிங்கமான குணாம்சம் அமிர்தலிங்கம் கம்பெனிக்கு மாத்திரமே உரியதாக இருக்கட்டும். புதிய அசிங்கங் இனி அவசியமில்லை. அதேபோல் இந்திய மக்களும் இந்திய மத்திய அரசை நிர்பந்திக்கும், அதேவேளை தமக்கென்று சொந்த வேலைத் திட்டத்தைக் கொண்டவர்களாவும் இருக்கவேண்டும்.

இந்திய அரசை பொறுத்தவரையில், அதன் உள்நாட்டு தேசிய நலனுக்கும், வெளிநாட்டு தேசிய நலனுக்கும், சர்வதேச அந்தஸ் திற்கும் இலங்கையின் அமெரிக்க சார்பு ராணுவ மயமாக்கல் கொள்கைகுந்தகம்விளைவிப்பதேயாகும். ஆகவே அதுவும்ஓர் அமை தியான இடைத் தீர்வையே விரும்புகின்றது. இதற்கா இந்தியா எடுக்கும் முயற்சியானது இலங்கை அரசுடன் ஒரு ராணுவமோத லாக வருவதுவும் இந்தியா நலனுக்கு ஆபத்தானதேயாகும். இந்த நிலையில் இந்திய மத்திய அரசு எவ்விதம் இதை கையாளும்

www.tamilarangam.net



என்பதை கணிப்பிடுவது மிகக்கடினமே. இந்திய அரசுக்கே இது கடினமான காரியம்தான்.

21) இலங்கையின் தற்போதைய ராணுவ தேக்கநிலையை நீக்குவதற்கான நிவாரணங்களாக உள்ளவை பின்வருவன மூன்றும் தான்.

1) தமிழ் ஈழ போராளிகளின் சக்தி அதிகரிக்கப்பட்டு அதன் மூலம் இலங்கை ராணுவத்தை மூலோபாய ரீதியான பாதுகாப்பு கட்டத்துள் மீண்டும் தள்ளுவது.

2) தென் இலங்கை மக்களின் யுத்தத்திற்கு எதிரானதும், ஜனநாயகததிற்கானதுமான இய்க்கம் வளர்ச்சி பெறுவது.

3) இந்தியாவின் செயலூக்குமுள்ள நடுநிலையாளரான பங்கு.

இம்மூன்றும் துறைகளிலும் இலங்கைத்தீவின் அனைத்து முற்போக்கு சக்திகளும் தமது கவனத்தைச் செலுத்த வேண்டும்! மா-லெனினிய வாதிகளுக்கும் இதுவே பொருந்தும். இதில் இருந்து விலகி நின்று ஒரு புரட்சிகர ஸ்தாபனத்தை உருவாக்க முடியாது. இதனுடாகவே அது நடைபெறும்.

ஃ

---

## ஒரு வார்த்தை......

வாத (populist) கருத்துக்களாகும். இதை நாம் பின்பற்றவிரும்பாதது மாத்திரமல்ல, அதன் முகத்தில் காறி உமிழவும், அதை மிதித்து துவைக்கவும் விரும்புகிறோம். எமது எழுத்துகள் இவ்விதமானவையாகவே இருக்கும். குழு பிரச்சார பாணியிலான எழுத்து நடையையும், படைப்புகளையும் கூட எதிர்க்கிறோம். சிங்கள மக்கள் மத்தியிலான ஜனதா விமுக்தி பெரமுனையும், தமிழ் ஈழ விடுதலைப் போராளிகளின் அநேக வெளியீடுகளும், பிரச்சாரங்களும் இவ்விதமானவையாகும். தமது குழுவைப் போற்றுவதும் ஏனையகுழுவைத்தூற்றுவதுமே இவற்றின் இலக்கியங்களாக உள்ளன. எந்த ஒரு குழுவையும் ஏற்றிப் போற்றுவதோ, அல்லது எந்த ஒரு குழுவையும் தூற்றி அவமானப் படுத்துவதோ எமது நோக்கமல்ல. ஜே. ஆரின் சிங்கள பெருந் தேசிய வாத— பாசிஸ Chaunist Cum Fasist) அரசுக்கும் செயற்பாட்டிற்கும் எதிரான யதார்த்த சக்தியாக இருக்கும் அனைத்து அரசியல் அணிகளும் எமது அரசியல் நண்பர்கள்தான். சித்தாந்த ரீதியிலும், வர்க்க ரீதியிலும் பகைவர்களாக இருந்தாலுங்கூட அரசியல் நண்பர்கள்தான். ஆனாலும் இந்த நண்பர்களில் பெரும்பான்மையோர் எமது வாசகர்களாக இருகபார்கள் என நாம் எண்ணவில்லை. சித்தாந்த வேறுபாடும், வர்க்க அபிலாசைகளில் உள்ளவேறுபாடுமே இதற்கானகாரணமாகும்.

பாட்டாளிவர்க்க புரட்சிகர இலட்சியத்தை வரவேற்பவர்களே எமது வாசகர்கள். நாம் அவர்களிலேயே சார்ந்துள்ளோம். ''நவ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சகாப்தம்'' அதன் சொந்தக்கால் என்பது ஒத்துழைப்பும் அவர்களின் ஒருமுகப்பாடும்தான். இன்றுவரை அது சிறுகச் சிறுக கிடைத்து விடுவதுபோல் இனியும் அது தொடரும் என நம்புகிறோம்.

'நவ சகாப்தம்' என்ற சஞ்சிகையின் கால இடைவெளி பற்றி தற்போது எதுவும் கூறமுடியாதுள்ளதற்கு மன்னிக்கவும். proVAவின் சமூக பலத்தின் வளர்ச்சியைப் பொறுத்தே இது எதிர்காலத்தில் தீர்மானிக்கப்படும் 1-வது இதழ் தனிஒரு கட்டுரையே தாங்கிவருகின்றது. இக் கட்டுரைப்பற்றி ஒரு சிறு முன்னுரை தரவிரும்புகிறோம்,

இதுவரை காலமும் தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தின் ஏற்ற இறக்கங்களையும், வளர்ச்சி விதிகளையும் நிபந்தனைகளையும் ஆராயும்போது அல்லது விளக்கும்போது இருவகை கோணத்தில் இருந்தே அணுகப்பட்டுள்ளன ஒன்று இராணுவ கண்ணோட்டம், மற்றையது, தூய அரசியல் கண்ணோட்டம். சுத்த இராணுவ கண்ணோட்டமே நடைமுறை செல்வாக்கு மிக்கதாய் இருந்தாலுங்கூட தூய அரசியல் கண்ணோட்டத்துடன் கூடிய நூல்களே அதிக அளவில் வெளிவந்துள்ளது.

ஈழ பிரச்சனையை (வரலாற்றுரீதியாக அணுகுதல், ஈழக் கோரிக்கைபற்றிய எதிரும் புதிருமான வாதவிவாதங்கள், மக்கள் ஸ்தாபனப்படுத்தப்படாதது சம்பந்தமான விமர்சனங்கள், புரட்சியின் தன்மையும் கட்டங்களும பற்றிய வாத விவாதங்கள், இந்திய அரசுடனும் இந்திய மக்களுடனுமான உறவுகள் சம்பந்தமான மீள் ஆய்வுகள்' சுங்கள மக்களுடனான தொடர்பும் அவர்கள் சம்பந்தப்பட்ட கணிப்பீடும், தமிழ் தேசீய வாத உணர்வுக்கும் குறுந்தேசியவாத உணர்வுக்கும் இடையேயான வேறுபாடுகள், சாவ தேச கோட்பாடுகள், மார்க்ஸிய லெனினிய கட்சி ஒன்றின் அவசியம் இத்தியாதி போன்றவை தூய அரசியல் விவகாரங்களாகும்.

சிறிலங்கா இராணுவத்திற்கும் தமிழ் ஈழ விடுதலை இராணுவத்திற்கும இடையேயான இராணுவ சமநிலை, அந்நிய தொடர்புகளின் இராணுவ விவகாரங்கள தொடர்புபட்ட பிரச்சனைகள், எதிரியின் இராணுவ பலத்தின் அதிகரிப்பும் தன்மையும், இயக்கங்கள் மத்தியில் கூட்டு இராணுவ நடவடிக்கையின்மையும் ஒருவருடன் ஒருவர் அடிபட்டுக் கொள்ளலும், மக்களுக்கு ஆயுதங்கள் வழங்காமை, ஆயுதங்கள் பற்றிய அறிவு, தாக்குதல் நடவடிக்கைகள் (operation) பற்றிய அறிவு, இராணுவ வீரனுக்கு இருக்கவேண்டிய இராணுவ தகமைகள், இராணுவ நடவடிக்கையில வளர்ச்சிக்கு மக்கள், இராணுவத்திற்கு செய்யவேண்டிய ஒத்துழைப்புகள், போர் நடவடிக்கைகள் பற்றிய (Millitary operation) சம்பவத் தொகுப்பு.. ...இத்தியாதி போன்றவை தூய. இராணுவ நடவடிக்கைகளாகும். இவை இராணுவ ஆற்றல், இராணுவ தொழில் நுட்ப விவகாரங்களுடன் தொடர்புபட்ட விவகாரங்களாகும். இவற்றுள் பல அனைத்து வர்க்கங்களுக்கும் பொதுவானவை. வர்க்கத்துக்கு அப்பாற்பட்டவை. ஆகவே அரசியலுக்கு அப்பாற்பட்டவை. அரசியல் தொடர்பற்றவை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தூய-அரசியல் பற்றிய இலக்கியமும், தூய-இராணுவ விவகாரம் பற்றிய இலக்கியமும் தமிழ் ஈழ விடுதலைப் போராளிகளுக்கு அவசியமானவையே. ஆனால் இவை மாத்திரம் போதாது. அதுமாத்திரமல்ல இவை இரண்டும் தனித்தனியே இருக்கக்கூடாது என்பதை உணர்ந்து கொண்ட பலர், இதை இணைக்க முற்பட்டார்கள். இலக்கியத்தில இவ்வளவு வெற்றிபெறவில்லை. ஆனால், செயல்முறையில் அரசியல் நபர்கள் எல்லோரும் இராணுவ பயிற்சி பெறவேண்டும் என்றும், இராணுவ நடவடிக்கை தெரிந்த நபர்கள் அரசியல் படிக்க வேண்டும் என்றும் சம்பிரதாயங்கள் பின்பற்றப்பட்டன. இதன் மூலம் இவ் இடைவெளி தீர்க்கப்பட முயற்சிக்கப்பட்டது. ஆனால் பிரச்சனை தீரவில்லை. தூய-அரசியலையும், தூய இராணுவ விவகாரத்தையும் தெரிந்திருந்த இரு தனித்தனி நபர்களுக்கு பதிலாக தமக்குள் இணைவில்லாமல் இருந்த இரண்டையும் பற்றித் தெரிந்திருந்த தனிநபர் ஒருவன் தோன்றினான்!

தமிழ் ஈழ விடுதலைப் போராளிகளுக்கு இன்று அவசியமானது அரசியல் சார் - இராணுவ (politico-military), இலக்கியங்களும், அமைப்பும், ஊழியர்களுமேயாகும். இதன் அர்த்தம் அரசியல் தெரிந்த இராணுவவீரர்களும், இராணுவ பயிற்சியுள்ள அரசியலாளர்களும் என்பதல்ல.

யுத்தம் தன்மட்டில் தானே ஒரு அரசியல்தான். இது இரத்தம் சிந்தா அரசியலின் ஒரு இரத்தம் சிந்தும் அரசியல் தொடர்ச்சியேயாகும். அரசியலின் தனித்தன்மை பெற்ற ஒரு வடிவம். குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில் யுத்தந்தான் அக்கால கட்ட அரசியலின் வெளித்தோற்றமும், அதே நேரத்தில உள்ளடக்கமும் ஆகும். யுத்த காலகட்டத்தின இந்த அரசியல் பற்றிய கல்விதான் (politico-millitary science) அரசியல் சார்—இராணுவ விஞ்ஞானம் எனப்படும். அரசியல் கல்வி, இராணுவ கல்வி என்ற தனித்தனிக் கல்வியின் இணைவல்ல மாறாக இது ஒரு தனி விஞ்ஞானம். இது ஒரு தனி முழுமை. ராணுவ மூலோபாயம், ராணுவ தந்திரோபாயம், போர் நடவடிக்கைகள் பற்றிய விஞ்ஞானம். ராணுவத்துள்ளான உள் உறவுகள், ராணுவ ஸ்தாபனத்துக்கும் அரசியல ஸ்தாபனத்துக்கும் இடையேயுள்ள உறவு, ராணுவத்தின் மனோதத்துவவியல், ராணுவத்தின் வெவ்வேறு வடிவங்கள் (கிரமமான சேனை, கொரில்லா சேனை, மக்கள் குடிப்படை) யுத்த கால கட்டத்தின்போது அரசியல் அதிகாரம் செலுத்தப்படவேண்டிய முறை, எதிரியின் இதே போது மக்களின் பொருளாதாரத்தை ஒழுங்குபடுத்தும் முறை, எதிரியின் ராணுவத்திற்கு எதிரான மனோதத்துவவியல் யுத்தம் போன்றவை அரசியல் சார்-ராணுவ விஞ்ஞானத்திற்கான உதாரணங்களாகும்.

தமிழ் ஈழ விடுதலைப் போராளிகளின் உடனடித்தேவையான அரசியல் சார் விஞ்ஞானத்தை வளர்ப்பது ''நவ சகாப்தம'' அதன் நோக்கங்களில் ஒன்றாகும். தூய அரசியல் மாத்திரம் பலனில்லை. ஆனால்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதுதான் அடிப்படையும், அத்திவாரமுமாகும். அத்திவாரம் மாத்திரம் வீடல்ல என்று கூறினால் அத்திவாரம் வேண்டாம் என்று கூறுவதாகாது. அடிப்படை அரசியல் யுத்தகால கட்ட அரசியலாக வளர்த்தெடுக்கப்படவேண்டும். ராணுவ தொழில் நுட்ப அறிவையும் உள்ளடக்கிய ராணுவ விஞ்ஞானம் என்பது வேறு விடயம், ராணுவ தொழில் நுட்பதிறன் ராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடும் அளவைப் பொறுத்தே ஒருவருக்கு கற்றுக் கொடுக்கப்படவேண்டும், கற்றுக் கொடுக்கப்படவும் முடியும். ஆனால், அரசியல் சார் – ராணுவ அறிவு பரவலாக தமிழ் ஈழ மக்களுக்கு மாத்திரமல்ல சிங்கள மக்களுக்கும் உணர்த்தப்பட வேண்டும்.

எமது 1-வது சஞ்சிகையின் இக்கட்டுரை நோக்கத்தை கொண்டதாகவே அமைந்துள்ளது. இது ஒரு அரசியல்சார்–இராணுவ விஞ்ஞான கட்டுரையாகும் இது தொடர்பான விமர்சனத்தை முன் வைக்க கோருகிறோம்.

'நவ-சகாப்தம்' அதன் வளர்ச்சிக்கு உதவுவீர்கள் என்று கோரி விடை பெறுகிறோம்.

ஏ ஜீ காந்தன்.

---

அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களும் தேசங்களும் தமது விடுதலைக்கான நம்பிக்கையை ஏகாதிபத்தியத்தினதும் அதன் அடிவருடிகளினது விவேகத்தின் மீது வைக்கக் கூடாது. தமது ஐக்கியத்தைப் பலப்படுத்தி போராட்டத்தில் அழுந்தி நிற்பதன் மூலம்தான் அவர்கள் வெற்றி பெற முடியும்

—அமெரிக்க-நோதின் தியம் கும்பல் தென் வியட்னாமை ஆக்கிரமிப்பதையும் அதன் மக்களை வதை செய்வதையும் எதிர்க்கும் அறிக்கை
29, ஆகஸ்ட், 1963.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

23

பல்
ரி

தியிலும்
னரஞ்சக

க்க.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்